விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதின்னான்கு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 ஐப்பசி 19 வியாழக்கிழமை (05.11.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 321




# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வன்னிக்கு நேற்று திடீர் விஜயம்

## மீள்குடியமர்வு குறித்து ஆராய்வு

(கொழும்பு)

வன்னி யுத்தம் முடிபடைந்ததன் பின்னர் முதற் தடவையாக வன்னிப்பிரதேசத்திற்கு நேற்று திடீர் விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு இடம்பெற்று வரும் மீள் குடியேற்றம் மற்றும் அபிவிருத்திப் பணிகளை நேரடியாகப் பார்வையிட்டுள்ளார். (14 பக்கம் பார்க்க)

## ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் அமெ. விசாரணை நடத்தவில்லை

### வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

கூட்டுப்படைகளின் கட்டளைத் தளபதியும், முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் அமெரிக்கா விசாரணைகளை நடத்தவில்லை என வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சரத் பொன்சேகா அமெரிக்காவிலிருந்து புறப்பட்டுள்ளதாகவும் இன்று இலங்கையை வந்தடைவார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் அமெரிக்காவை விட்டு புறப்படுவதற்கு முன்னர் எந்தவிதமான விசாரணைகளும் நடத்தப்படவில்லை.

அமெரிக்க உள்விவகார திணைக்களங்களோ அல்லது வேறு நிறுவனங்களோ விசாரணை நடத்தவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சரத் பொன்சேகாவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளதாக (14ஆம் பக்கம் பார்க்க)

## சேர்ந்து செயற்படுவது குறித்து தமிழ்-முஸ்லிம் கட்சிகள் பேச்சு

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமைகள் தொடர்பாகவும் ஒன்று சேர்ந்து செயற்பட வேண்டிய தேவைகள் குறித்தும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் கலந்துரையாடியுள்ளன.

நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் நேற்று புதன்கிழமை பிற்பகல் இடம் பெற்ற இந்தக் கலந்துரையாடலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனநாயக மக்கள் முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் ஒன்று கூடி ஆராய்ந்துள்ளனர்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களும் ரவூப் ஹக்கீம் தலைமையில் முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் மனோகணேஷனும் சந்திப்பில் கலந்து கொண்டனர். (14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் இருவர் மீது விசாரணை

(கொழும்பு)

தமிழ்தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோரிடம் இவ்வாறு விசாரணை நடத்தப்பட்டுள்ளது. (14ஆம் பக்கம் பார்க்க)

### உள்ளே...

- சிவல்பூரி சிங்காரம் எழுதும் இராகு கேது மாற்றம் உங்களுக்கு எப்படி?
- அளவெட்டி தெற்கில் அதிசயம்.
- க.பொ.த. (சா/த) பரீட்சை கணித பாட மாதிரி வினாத் தாள்.

## பட்டதாரிகள் கொழும்பில் ஆர்ப்பாட்டம் பொலிஸார் கண்ணீர்க்குண்டுப் பிரயோகம்

(கொழும்பு)

தொழில் வாய்ப்பைக்கோரி ஒன்றிணைந்த தொழில் வாய்ப்பற்ற பட்டதாரிகள் நேற்று கொழும்பில் மேற்கொண்ட போராட்டத்தின் போது பலபட்டதாரிகள் விசாரணைக்காக பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

கொழும்பு லோட்டஸ் சுற்றுவட்டத்திலிருந்து ஜனாதிபதி செயலகத்திற்குச் செல்ல முற்பட்ட வேளையில் அதனைத்தடுத்த பொலிசாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களிற்கும் இடையே முறுகல் நிலை தோன்றியது.

இந்த நிலையில் நிலைமையைக்கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவதற்காக பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது தண்ணீர்ப் பிரயோகம் மற்றும் கண்ணீர்க்குண்டுப் பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனையடுத்து பேச்சுவார்த்தைக்கு அனுமதி தரப்படும்வரை தாம் அங்கிருந்து செல்லப்போவதில்லை எனத்தெரிவித்து மழை பெய்து (14ஆம் பக்கம் பார்க்க)



நேற்று வன்னிக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சிறுமி ஒருத்தி மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும், இராணுவத்தினருடன் ஜனாதிபதி கலந்துரையாடுவதையும் படங்களில் காணலாம்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## 72 கர்ப்பிணித் தாய்மார்கள் நேற்று அழைத்து வரப்பட்டனர்

வவுனியாவிலிருந்து 72கர்ப்பிணித் தாய்மாரும் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்த 127 பேரும் நேற்று அழைத்துவரப்பட்டதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

இவர்கள் தெல்லிப்பழையில் தங்கவைக்கப்பட்டு இன்று அவர்களின் உறவினர்களிடம் கையளிக்கப்படவுள்ளனர். இதேவேளை இன்றும் ஒரு தொகுதி மக்கள் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்படவுள்ளதாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ச-14)

## சவுதியில் மரண தண்டனை

சவுதிஅரேபியாவில் நேற்று இலங்கையைச் சேர்ந்த இருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ஆண் ஒருவருக்கும் பெண் ஒருவருக்குமே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் இருவர் மீதும் கொள்ளை மற்றும் கொலைக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன. ஏற்கனவே 2 வருடங்களுக்கு முன் னர் இலங்கையின் 4 இளைஞர்கள் கொள்ளைச் சம்பவம் ஒன்றுக்காக சவுதி அரேபியாவில் மரண தண்டனைக்கு உள்ளாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பெண்பிள்ளைகளை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் சேர்க்க முடியும்

## செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பெண் பிள்ளைகளை பொறுப்பேற்று பராமரிப்பதற்கு தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லம் தயாராக இருப்பதாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவலர் சபைத் தலைவர் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் தெரிவித்துள்ளார்.

வன்னியுத்தத்தால் பாதிக்கப்பட்ட 16 வயதுக்குட்பட்ட பெண் பிள்ளைகளை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் சேர்க்க முடியும்.

தற்போது மீளக்குடியமர்ந்து வரும் குடும்பங்கள் பல்வேறுபட்ட துன்பங்களை அனுபவித்துள்ள நிலையில் பெண் பிள்ளைகளின் எதிர்கால நலன்கருதி துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் பெண் பிள்ளைகளை இணைத்துக் கொள்வதற்கானத் திட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை நலன்புரி முகாம்களில் இருந்து மீளக்குடியமர்வதற்காக அழைத்து வரப்படுபவர்களில் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் தங்கவைக்கப்படுபவர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளை மேற்படி தேவஸ்தானம் வழங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (ந)

## யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்தியாவிடம் உதவி கோரத் திட்டம்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டு வரும் யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்தியாவிடம் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்றின் ஆய்வுப் பகுதி சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரர்களான பசில் ராஜபக்ஷ, கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் விரைவில் புதுடில்லி விரையவுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

யுத்தக்குற்றச்சாட்டுக்கள்தொடர்பில்அமெரிக்க அரசாங்கம் இலங்கை மீது பிரயோகித்துவரும் அழுத்தங்களை நீக்க ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த விஜயம் அமையப் பெறும் என தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையின் முன்னள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் நடத்தப்படவுள்ள விசாரணைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாகக் குறிப்பிடப்படுகிறது. யுத்த நடவடிக்கைகளுக்கு இந்தியா திரைமறைவிலிருந்து பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளதாக அந்த ஆய்வுக்கட்டுரையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக இந்தியப் பொதுத் தேர்தல்களுக்கு முன்னதாக இராணுவ முன் நகர்வுகளை முடிபுறுத்த வேண்டுமென இந்தியா அழுத்தம் கொடுத்து வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுகளில் இந்தியாவிற்கு மறைமுக பங்கு இருப்பதாகவும் இதனால் இலங்கையை பாதுகாக்கும் முனைப்புகளில் இந்தியா தீவிரம் காட்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-5)

## பம்பலப்பிட்டியில் இளைஞன் கொலை; எதிர்ப்புத் தெரிவித்து நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பம்பலப்பிட்டி கடலில் தமிழ் இளைஞர் ஒருவர் பொலிசாரால் தாக்கப்பட்டு நீரில் மூழ்கி உயிரிழந்த சம்பவத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பில் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் சிவில் அமைப்புக்கள், சமய தலைவர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு பொலிஸாரின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் பொலிஸாருக்கு எதிராக பல்வேறு கோசங்களை எழுப்பியதுடன் குற்றமிழைத்த பொலிஸாருக்கு தகுந்த தண்டனை வழங்குமாறும் கோசம் எழுப்பினர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போது கருத்து தெரிவித்த ஜனநாய மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், பம்பலபிட்டி கடலில் இடம்பெற்ற இந்த படு பாதகமான சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாகவும், இதற்கு அரசாங்கம் பொறுப்பு கூறவேண்டும் என வும் பகிரங்கமாக கோரிக்கை விடுத்தார்.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியால் கோட்டை ரயில் நிலையம் முன்பாக சுமார் இரண்டு மணி நேரமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. (ச-5)

## கல்விமாணி ஆங்கில பாடநெறி நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய கல்வி நிறுவக கல்விமாணி ஆங்கில பாடநெறிக்கு விண்ணப்பித்து மகரகம தேசிய கல்வி நிறுவகத்திற்கு நேர்முகப் பரீட்சைக்குச் செல்ல முடியாதவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் இன்று வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவிருக்கின்றது.

சம்பந்தப்பட்டவர்களை உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவன இணைப்பாளர் எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை கேட்டுள்ளார். (ச)

## கரவெட்டி பிரதேச மக்களுக்கான அடையாள அட்டை, பிறப்பு சான்றிதழ் பெறுவதற்கான நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச மக்களுக்கான தேசிய அடையாள அட்டை வழங்கலும், பிறப்பு மற்றும் திருமணச்சான்றிதழ் வழங்கலுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் 08 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 08.30 முதல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்நடமாடும் சேவையில் ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொள்வதுடன் புதிய தேசிய அடையாள அட்டை மற்றும் தொலைந்த, பழுதடைந்த அடையாள அட்டைகளுக்கான பிரதி தேசிய அடையாள அட்டைகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கான சேவை, சமூக சேவைத் திணைக்களத்தினால் முதியோர் அடையாள அட்டை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளலும், அடையாள அட்டை வழங்கலுமான சேவை, மனித உரிமை தொடர்பான சட்ட ஆலோசனை வழங்கல், காணி மற்றும் தேசிய வீடமைப்பு அதிகார சபை தொடர்பான பிணக்குகள் தீர்க்கப்படுவதற்கான ஆலோசனை வழங்கல், இலஞ்ச ஆணையாளரினால் முறைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளல், பிரதேச மத்தியஸ்த சபை விவகாரங்கள் தொடர்பான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளலும், சட்ட ஆலோசனை வழங்கலும் ஆகிய இன்னோரன்ன சேவைகளும் ஆற்றப்படவுள்ளன.

கரவெட்டி பிரதேசத்திலுள்ள கட்டைவேலி மற்றும் உடுப்பிட்டி பதிவாளர் பிரிவிற்குட்பட்ட பிறப்பு மற்றும் திருமணச் சான்றிதழ் வழங்கல் சேவைகளும் இதே தினத்தில் நடைபெறவுள்ளன.

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளக்கட்டியெழுப்புதலுக்கான செயற்றிட்டத்தின் அனுசரணையுடன் நடைபெறும் இந்நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை மற்றும் பிறப்பு, திரு மணச் சான்றிதழ் வழங்கலுக்கான கட்டண செலவீனத்தை ஈடு செய்ய நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு முன் வந்துள்ளது. தேசிய அடையாள அட்டை பெறும் பொருட்டு புகைப்படம் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்கு களும் மேற்கொள்ளப்பட்டதுடன் இவற்றிற் கான செலவீனத்தையும் மேற்படி அமைச்சு ஈடு செய்ய முன்வந்துள்ளது.

எனவே இவ்வரிய சந்தர்ப்பத்தை நழுவவிடாது கரவெட்டி பிரதேசமக்கள் இந்நடமாடும் சேவையில் வழங் கப்படும் சேவைகளைப் பெற்றுபயனடையும்வண்ணம்குறிப்பிட்டதினத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத் தில் சமுகமளிக்கும்படிகரவெட்டி பிரதேச செயலாளர் சி.சத் தியசீலன் கேட்டுக்கொள்கிறார். (ஓ)

**காணி விற்பனைக்கு**

பயன் தரும் மரங்களுடன் கிணறும் அமைந்த 18 பரப்புக் காணி, மீசாலை மேற்கு கந்தசாமி வீதியில் விற்பனைக்குள்ளது. அதே போன்ற இன்னொரு 10 பரப்பு காணி மீசாலை வடக்கு வேம்பிராய் பகுதியில் விற்பனைக்குள்ளது. விலை நேரில் பேசலாம்.

தொடர்பு: 0777 205533

(3884)

**விற்பனைக்கு**

காங்கேசன்துறை வீதியில் இணுவில் துரை வீதிக்கு முன் பக்கமாக உள்ள ஒழுங்கையில் 150 யார் தூரத்தில் 1 பரப்பும் 5 குளியும் கொண்ட காணியில் மேல்மாடி வீடும் ஆதனமும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய

077 5081748

021 3215151

(3883)

## சஞ்சிகை வெளியீடும் இறுவட்டு வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் கணிதமன்ற முகிழ்நிலை ஆசிரியர்களினால் உருவாக்கப்பட்ட 'பரிதி' சஞ்சிகை வெளியீடும், இறுவட்டு வெளியீடும் கல்லூரியின் கலையரங்கில் இன்று காலை 9.30 மணிக்கு மன்றத் தலைவர் முகிழ்நிலை ஆசிரியர் து.துஸ்யந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் பிரதம விருந்தினராக கல்லூரியின் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் கலந்து சிறப்பிக்க உள்ளார். (ஓ)

## 20 வருட ஆசிரியர் சேவையை பூர்த்தி செய்தவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கல்வி கற்பிக்கும் 50 வயதுக்கு மேற்பட்ட 20 வருட ஆசிரியர் சேவையை பூர்த்தி செய்தவர்களுடனான கலந்துரையாடல் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி தகைமையுள்ளவர்களை ஆசிரியர் தரம் – 1 இற்கு பதவியுயர்வு செய்தல் தொடர்பாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்திப்பதற்கு முன்னதாக இக்கலந்துரையா டல் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

எனவே 50 வயதுக்கு மேற்பட்ட 20 வருட ஆசிரியர் சேவையை பூர்த்தி செய்தவர்கள் 0213735435, 0779553216 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## பேருந்து–லொறி வல்லையில் விபத்து

(வடமராட்சி)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்தும் லொறி ஒன்றும் மோதி விபத்துக்குள்ளானதில் இரு வாகனங்களும் பலத்தசேதமடைந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பேருந்தும் நெல்லியடியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த லொறியும் நேற்றுப்பிற்பகல் ஒரு மணியளவில் வல்லைவெளிப்பகுதியில் விபத்துக்குள்ளாகின.

இவ்விபத்துச் சம்பவத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை. (ச-10)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிலாளர் சங்கத்தலைவராக ஜனாதிபதி மஹிந்த ஏகமனதாகத் தெரிவு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கத்தின் அடுத்த மூன்றாண்டுகளுக்கு தலைமைப்பதவியை வகிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர தொழிலாளர் சங் கத்தின் 7ஆவது தேசிய மாநாட்டின் போதே இந்த தெரிவு இடம்பெற்றது.

பொதுச் செயலாளராக லெஸ்லி தேவேந்திர மீண்டும் தெரிவானார். பொருளாளராக நொயல் பத்மசிறி காரியவசம் தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் நிர்வாகக் குழுவுக்கு கட்சி யின் சார்பில் அமைச்சர்கள் மைத்திரி பால சிறிசேன, அனுர பிரியதர்சன யாப்பா, சுமேதா ஜீ.ஜயசேன, அதாவுட சென விரட்ன, ரீ.பி.ஏக்க நாயக்க், சமல்ராஜபக்ஷ ஆகியோரும் மேல் மாகாண ஆளுநர் எஸ். அலவி மௌலானா, பாரதலக் ஷ்மன் பிறேமச்சந்திர ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (ஓ-6)

# எதிர்க்கட்சிகளின் கூட்டணியான ஐக்கிய தேசிய முன்னணி அணியுடன் தமிழ் தேசிய கூட்டமைப்புஇணையுமா?

## முடிபு இன்று தெரியவரும்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரச கட்சிக்கு எதிராக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவின் தலைமையில் எதிர்க்கட்சிகள் அடங்கிய ஐக்கிய தேசிய முன்னணி அணி திரண்டுள்ளது.

இதில் த.தே.கூ இணைவது குறித்த முடிவு இன்று தெரியவரும் என அந்தக் கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய கூட்டு முன்னணியில் இணைவது என தமிழ்த்தேசிய கட்சியின் சார்பில் கொள்கையளவில் முடிவு ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் இது குறித்த இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக்கூட்டம் இன்று கொழும்பில் கூடி இது தொடர்பான இறுதி முடிபு எடுக்கும் என அந்த முக்கியஸ்தர் மேலும் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையினை மாற்ற வேண்டும் என்பதே ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய நோக்கமாகக் கருதப்படுகின்ற போதிலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நிலைப்பாடு தமிழ் மக்களின் அரசியல் நலன்களை முதன்மைப் படுத்துவதாகவே இருக்கின்றது.

இந்த நிலையில் ஐக்கிய தேசிய முன்னணியில் எந்த வகையில் என்ன வகையான முடிவோடு இணைந்து செயற்படுவது என்பது குறித்து இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராய்ந்து தீர்மானம் மேற்கொள்ளவுள்ளதாகவும் அந்த முக்கியஸ்தர் தெரிவித்தார். (ஓ-6)

# யாழ். கல்வி வலய பாடசாலைகளின் அழகியல் கண்காட்சி போட்டி முடிபுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட அழகியல் கண்காட்சிப் போட்டி முடிபுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் பரிசில் பெறுவோர் விபரம் வரு மாறு,

**சங்கீதம்**

மேனுஜா சௌந்தரராஜா (வைத்தீஸ் வராக் கல்லூரி) , வி.டனுசா குழுவினர் (முத் துத்தம்பி மகாவித்தியாலயம்), க.கிருபாகர்(கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), ம.நிறோஷன் (யாழ். இந்துக்கல்லூரி), வி.தேவசேனா (வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை), கணேஷ் லிலோயன் (அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்), ப.டுபாஸ்கரன், தி.சோபன் ராஜ் (உயரப் புலம் மெதடிஸ்த மிசன் த.க. பாடசாலை).

இ.மிர்ஜாஎமினா, ப.மேரி ஜெனித்தா (பாசையூர் புனித அந்தோனியார் வித்தியாலயம்), ர.விஜயராஜ் (கொக்குவில் இராம கிருஸ்ண வித்தியாலயம்), அ.மதிராஜ் (பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம்), ச.இராஜதுளசி (கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), க.பிரியங்கா( கோப்பாய் நாவலர் வித்தியாலயம்) சி.பௌஸ்சினா (நாவந்துறை றோமன் கத் தோலிக்க த.க பாடசாலை), அ.நாகதீபா (திருக் குடும்ப கன்னியர் மடம்)

**சித்திரம்**

வ.மகிசாலினி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), ஜெ.திவ்வியா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஸ்ரீ பாமினி(அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்) , சி.கௌசல்யன் (சென் ஜேன்ஸ் கல்லூரி), அ.கத்தறீனா (திருக் குடும்ப கன்னியர் மடம்), து.தணிகை குமரன் (யாழ். இந்துக் கல்லூரி), வே. சதீஸ்கரன்( வைத்தீஸ்வராக் கல்லூரி), சி.சிவசெந்தூரி (யாழ். இந்து மகளிர்கல்லூரி), சி.தயாகரன் (அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாலயம்), ச.பக்த ஜெனனி (வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), க.கண்ணராஜ் (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்), அ.மேரிகிறிஸ்ர பெலானி (பாசையூர் புனித அந்தோனியார் வித்தியாலயம்), க.வளர்மதி (ஆவரங்கால் நடராஜா இராம லிங்க வித்தியாலயம்)

**ஆக்கம்**

வி.சாரதாஜினி (திருக்குடும்ப கன்னியர் மடம் வித்தியாலயம்), கு.நேருஜன் (அச்சுவேலி மத்திய கல்லூரி), நா.கார்த்திக் (வைத்தீஸ்வராக்கல்லூரி ), யோ. தமிழரசி யாழ். இந்து மகளிர் கல்லூரி), கு.நிஜானி (வேம்படி பெண்கள் உயர்தரப்பாடசாலை), யோ.கஜலக்சன்(சென்ஜோன்ஸ் கல்லூரி), கு.சத்தியதாசன் (சன்மார்ந்த வித்தியாலயம்), ஜெ.தமிழரசி (யாழ். இந்துமகளிர் கல்லூரி), க.நிவாஸ் (செங்குந்தா இந்துக்கல்லூரி), டெ.பிறீடன் (கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயம்), ஸ்ரீ .பத்மாகரன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), அன்ரன் கிறிஸ்ரியன் (புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம்), க.திலீபன் (கனரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்). (ஓ-7)

## நூல்வெளியீட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நவம் நினைவுக்குழுவும் புதிய பூமி வெளியீட்டகமும் இணைந்து நடத்தும் தோழர் நவத்தின் 5 ஆவது ஆண்டு நினைவும் சி.கா. செ. நேர்காணல் நூல் வெளியீடும் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு 571/15 காலி வீதி வெள்ளவத்தை கொழும்பு -6 என்னும் முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவை தலைமைப்பணி மனையின் கைலாசபதி கேட்போர் கூடத்தில் சோ. தேவராஜா தலைமையில நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் நினைவுரையை சி. கா. செந்தில் வழங்கவுள்ளதுடன் நூல் வெளியீட்டுரையை இ தம்பையா வழங்கவுள்ளார். (ஓ-4)


31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம்
24
04
1930

மறைவு
06
10
2009

உள்ளத்தால் உயர்வாகி
வாழ்விற்கு வழிகாட்டி
இதயத்தில் இருக்கும்
எங்கள் அம்மாவே!
உங்கள் ஆத்மா சாந்தி
அடையப் பிரார்த்திக்கிறோம்.

திருமதி தங்கம் வேலுப்பிள்ளை

கடந்த 06.10.2009 அன்று இறைபதம் எய்திய எமது குடும்ப ஒளிவிளக்கின் அந்தியேட்டிக் கிரியைகள், இன்று 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6 மணியளவில் புலோலி புற்றளை சித்தி விநாயகர் ஆலய அந்தியேட்டி மடத்தில் நடைபெறவுள்ளது.

அதனைத் தொடர்ந்து வீட்டுக்கிருத்திய கிரியைகள், 10 மணி யளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். இந்நிகழ்வுகளில் குடும்பசமேதராய் வருகைதந்து அன்னாரது ஆத்ம சாந்திப்பிரார்த் தனையிலும்,தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சாவகச்சேரி வீதி,
மந்திகை,
புலோலி.

வே.மனோகரன்
(மகன்)

(C-3646)


# கணக்கு வாக்கெடுப்பில் ஜனாதிபதியின் நாளாந்தச் செலவு 196 இலட்சமாக அதிகரிப்பு ஜே.வி.பி. தெரிவிப்பு

(கொழும்பு)

2009ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் ஜனாதிபதியின் செலவிற்கென 1 பில்லியன் ரூபா அதிகரிக்கப்பட்டிருந்தது. கணக்கு வாக்கெடுப்பில் 140 கோடி ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஜனாதிபதியின் நாளாந்த செலவு 196 இலட்சம் ரூபாவாகும் என ஜே.வி.பி. எம்.பி.யான சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தவணைகளை பெற்றுக்கொள்வதற்கு வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தால் மக்களின் வாக்குகள் கிடைக்காது .வாக்குகளை பெற்றுக்கொள்வதற்கான வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தால் தவணைப்பணம் கிடைக்காது என்றும் சுட்டிக்காட்டினார்.

கணக்கு வாக்கெடுப்பு பிரேரணை மீதான விவாத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்குஅவர்தொடர்ந்துஉரையாற்றுகையில்,

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஜனாதிபதி தேர்தலுக்குப் பின்னர் டிசம்பர் மாதம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார்.

எனினும் நான்கு மாதங்களுக்கான கணக்கு வாக்கெடுப்பை அரசாங்கம் சமர்ப்பித்துள்ளது. இதனூடாக ஜனாதிபதியின் தலைப்பின் கீழ் முழு வருடத்திற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

வரவு செலவுத்திட்டமா? சர்வதேச நாணய நிதியத்தின் தவணைப்பணமா? மக்களின் வாக்கா? என்று மும்முனை போராட்டத்தினாலேயே கணக்கு வாக்கெடுப்பு சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

தேர்தல் வர விருக்கின்ற நிலையில் வரவு-செலவு திட்டத்தை சமர்ப்பித்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி வரிகளை குறைத்து சம்பளங்களை அதிகரித்து வாக்குகளை பெற்றுக் கொண்டதன் பின்னர் மற்றுமொரு வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்திருக்கலாம்.

வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு அரசாங்கம் அஞ்சியது ஏன்? தேர்தல் அச்சமா? அவ்வாறு பயப்படாமல் இருந்தால் திட்டத்தின் மூலம் நிவாரணங்களை முன் வைத்து ஜே.வி.பி. உள்ளிட்ட எதிர்க் கட்சிகளின் வாயை அடைத்திருக்கலாம்.

அரசாங்கம் அச்சமடைந்துள்ளதை பார்க்கின்ற போது பாராளுமன்றத்தின் காலத்தை அரசாங்கம் நீடிக்க போகின்றதா? என்ற அச்சம் எழுந்துள்ளது.

ஜனாதிபதிக்கு 2009 ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 26 அமைச்சுக்களுக்கான செலவில் கழித்து ஜனாதிபதியின் செலவிற்கென மேலதிகமாக 1 பில்லியன் ரூபா சேர்த்துக் கொள்ளப்பட்டது. இம்முறை 140 கோடி ரூபா அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் ஜனாதிபதியின் நாளாந்த செலவு 196 இலட்சம் ரூபாவாகும். (ஓ-6)




தும்பளை முருகன் ஆலயத்தில் நடைபெற்ற சூரசம்கார நிகழ்வைப் படங்களில் காணலாம். (படங்கள்-கே.கே.தாஸன்)

## முதலாம் அரையாண்டு பரீட்சை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் நடாத்தப்பட்டு வரும் பொது நிர்வாகத்தில் முதுகலைமாணி கற்கைநெறிக்கான முதலாம் அரையாண்டுப் பரீட்சை இம்மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

பரீட்சைக்கான அனுமதி அட்டை மற்றும் நேரசூசியினை நாளை வெள்ளிக்கிழமையில் இருந்து பட்டப்பின் படிப்புகள் பீட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என பீடாதிபதி அறிவித்துள்ளார். (ஓ)

## திறப்பு விழாக்கள் பிற்போடப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, கரவெட்டி பிரதேச வைத்தியசாலை மற்றும் இளவாலை ஆரம்ப மருத்துவ பராமரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் புதிதாக அமைக்கப்பட்ட கட்டடங்களின் திறப்பு விழாக்கள் தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும், இதற்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இத்திறப்பு விழாக்கள் முறையே எதிர்வரும் 6,7,8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ)




# நலிவுற்றோர் நிவாரண விநியோக நடைமுறையை மீளாய்வு செய்ய வேண்டும்

## யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நலிவுற்றோர் நிவாரண விநியோக நடைமுறையை மீளாய்வு செய்து பயனாளித் தெரிவுகளில் நெகிழ்ச்சித் தன்மையைக் கடைப்பிடிக்கும் வகையில் வழிவகை செய்யுமாறு யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவர் சீ.வி.கே.சிவஞானம் யாழ்.அரச அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நலிவுற்றோர் நிவாரண உதவி பெற்று வந்த பலருக்கு பொதுவேலை செய்யவில்லை என்ற காரணம் காட்டி அந்த நிவாரணம் வழங்கல் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளவர்களில் பெரும்பான்மையினர் 55-60 வயதைத் தாண்டியவர்களும், உண்மையில் வேலை செய்வதற்கு உடல்வலு குறைந்தவர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். வேலை எதுவும் செய்ய இயலாதவர்களே நலிவுற்றோர் ஆகக் கருதப்படவேண்டும்.

எனவே இந்த நிவாரண விநியோக நடைமுறையை மீளாய்வு செய்து பயனளித்து தெரிவுகளில் நெகிழ்ச்சித்தன்மையைக் கடைப்பிடிக்கும் வகையில் கிராமசேவையாளர்களும், பிரதேச செயலக அதிகாரிகளும் செயற்பட வழிவகை செய்யுமாறு மனிதாபிமான அடிப்படையில் கேட்டுக்கொள்கின்றோம் ஏன்று அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 12 இற்கு வணிகக் கல்வி (புதிய பாடத்திட்டம்) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை வெள்ளிக்கிழமையும் விசேட கல்வி கேட்டல் குறைபாடுகளை உடைய மாணவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேலும் தரம்12,13 இற்கு தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான புள்ளித் திட்டம் தொடர்பான செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு குறித்த ஆசிரியர்களை தவறாது சமுகமளிக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் தரம் 12 வரை கற்பிக்கும் சித்திர பாட ஆசிரியர்களுக்கான செயலமர்வு எதிர்வரும் 7, 14 ஆகிய திகதிகளில் காலை 8.30-4.30 மணிவரை யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆசிரியர் வள நிலையத்தில் இடம் பெறவுள்ளதாக யாழ். வலயக் கல்வி கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ-7)

## கதை சொல்லும் நேரம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தால் நடத்தப்பட்டு வரும் கதை சொல்லும் நேரம் நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் அதிபர் க.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா கலந்து சிறப்பிப்பதுடன் மாணவர்களுக்கு அறிவுரைக் கதைகள் சொல்லவுள்ளார். (ஓ-4)

## கல்விக் கண்காட்சி

(அல்வாய்)

பருத்தித்துறை தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலையின் கல்விக் கண்காட்சி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் கா.ராமஜெயம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி கல்வி வலய கணக்காளர் ஆ.கிரிதரன் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைக்கவுள்ளதுடன் சிறப்புவிருந்தினராக பருத்தித்துறை கோட்டக் கல்வி அதிகாரி பா.ரகுநாதன் கலந்துகொள்ளவுள்ளா (ஓ-4-19)

## உலக வலுவிழந்தோர் தின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலய விசேட கல்விப் பிரிவால் உலக வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு யாழ்.வலயப் பாடசாலைகளில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்களிடையே எதிர்வரும் 15 ஆம் திகதி பல்வேறு போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

எனவே போட்டியில் பங்குபற்றவுள்ள மாணவர்களின் விபரங்களை பாடசாலை அதிபர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்னர் விசேட கல்வி ஆசிரிய ஆலோசகருக்கு அனுப்பிவைக்குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-7)

## வருடாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆசிரியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியில் வடமாகாண ஆசிரியர் சங்க யாழ்.மாவட்டக் கிளையினரும் இலங்கை ஆசிரியர் சங்கத் தினதும் தலைவர் தோழர் சா. தியாகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

சங்க உறுப்பினர்கள் தவறாது கலந்து சிறப்பிக்குமாறும் புதிதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தில் இணையவிரும்பும் ஆசிரியர்களை வரவேற்பதாகவும் சங்கப் பொதுச் செயலாளர் இ. யோ. லெஸ்லி அறிவித்துள்ளார். (ஓ-4)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு நீதி மற்றும் சட்ட உதவிகள் வழங்கல்

(அல்வாய்)

நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகியன இணைந்து ஆசிய அபிவிருத்தி வங்கியின் அனுசரணையுடன் செயல்படுத்தும் விசேட செயற்திட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிமுதல் 3 மணி வரை யாழ்.வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் தாய், தந்தையர் இருவரையும் இழந்த சிறுவர்கள் மற்றும் 21 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாருக்கும் பல நன்மைகளை தரும் ரன்கெகுளு வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதுடன் நிலையான வைப்பின் கீழ் 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் இவ்வனர்த்தத்தினால் தாய் அல்லது தந்தையரை இழந்த 21 வயதிற்குட்பட்ட இருபாலாருக்கும் ரன்கெகுளு வங்கிக் கணக்கு ஆரம்பித்து வைக்கப்படுவதுடன் நிலையான வைப்பின் கீழ் 5 ஆயிரத்து 800 ரூபா வழங்கப்படவுள்ளது.மேலும் சட்ட உதவியும் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளது. இலங்கை வங்கியினூடாக நிதி உதவி வழங்குவதற்கு பதிவுசெய்வதற்கான வேலைத் திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு சுனாமி அனர்த்தத்தினால் இறந்த பெற்றோரின் மரண அத்தாட்சிப் பத்திரமும் அதன் மூலப்பிரதியுடன் புகைப்படப் பிரதியும் சிறுவர்களின் பிறப்பு அத்தாட்சி பத்திரமும் அதன் மூலப் பிரதியுடன் புகைப்படப் பிரதியையும் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

இந்த வகையில் அடங்கும் சிறுவர்களின் பாதுகாவலர் அச் சிறுவருடனும் குறித்த ஆவணங்களுடனும் வருகை தந்தால் மேற்படி உதவிகள் வழங்கப்படும் என பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

# நடமாடும் சேவையும், மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

சுகாதாரத்துறைப் பணியாளர்களுக்கான நடமாடும் சேவை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கும், நிறுவனத் தலைவர்களுக்கான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக்கூட்டம் பிற்பகல் 2 மணிக்கும் திட்டமிட்டபடி நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரும், மாகாண சுகாதார பணிப்பாளரும், மாகாண சுகாதார அமைச்சினதும் மாகாண சுகாதாரப் பணிமனையினதும் உத்தியோகத்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது கிளிநொச்சி,முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து யாழ்.மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்து வந்து தற்காலிகமாக இணைப்பில் உள்ள ஊழியர்கள் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் கலந்துகொண்டு தங்களுக்குரிய பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளலாம் என யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)

# விஜய நகரப் பேரரசு

44

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

### பேராசிரியர் க.அ.நீலகண்டசாஸ்திரிகள்

மூன்றாம் வேங்கடனுடைய தம்பியாகிய சென்ன வேங்கடனுடைய மகன் சீரங்கள் தன்னுடைய பெரியப்பன் சார்பில் போரில் இறங்கினான். அவனுக்கு பழவேற்காட்டிலிருந்த டச்சுக்காரர்களும் துணைபுரிந்தார்கள். சண்டையில் தோற்றுப்போன திம்மன் வேங்கடனுடைய உரிமையை ஏற்றுக் கொண்டான். ஆனால், அவன் வென்ற இடங்களில் சிலவற்றை அவனே வைத்துக் கொள்வதற்கு இசைவு பெற்றான். அதன் பின்னும் அவன் தொல்லைகொடுத்ததால், செஞ்சிநாயக்கன் அவனை 1635 இல் போரில் வென்று கொன்றுவிட்டான் . அதன்பின் நாட்டில் அமைதி ஏற்பட்டது. வேங்கடன் வேலூருக்குச் சென்று அங்கேயே குடியேறிவிட்டான். இதற்கிடையில் பிஜப்பூர் சுல்தான் பெனுகொண்டாவைத் தாக்கினான். அதனைக்காக்கும் பொறுப்பை வேங்கடன் கொண்டி நாயக்கனிடம் ஒப்படைத்தான். சுமார் பதினைந்து ஆண்டுகளுக்குப்பின் பேரரசு சிதைந்து போகும் வரையிலும் கொண்டி நாயக்கன் பெனுகொண்டாவைப் பகைவர் கைப்பற்றாதவாறு பார்த்துக்கொண்டான்.

செஞ்சி நாயக்கனிடம் வேங்கடன் தனிப் பற்று வைத்திருந்தான் என்று நினைதத் தஞ்சாவூர் மதுரை நாயக்கர்கள் வேங்கடனைச் சிறை பிடிப்பதற்குச் சூழ்ச்சி செய்தார்கள். அவர்களுடைய சதியாலோசனை வெளிப்பட்டுவிட்டதால் போர் மூண்டது. ஆனால், விரைவிலேயே ஏதோ ஒருவகை யான சமாதானம் ஏற்பட்டது. தொடக்கத்தில் தன் பெரியப்பனுக்குப் பெரிதும் துணை செய்த சீரங்கன் என்ன காரணத்தாலோ அவனுக்கு எதிராகப் பிஜப்பூர் சுல்தானுடன் சேர்ந்து கொண்டான்.

அதனுடன் நில்லாமல் அவன் முதலில் 1638 ஆம் ஆண்டிலும் பின்னர் 1641 ஆம் ஆண்டிலும் தன்னுடைய பெரியப்பன் மீது படையெடுக்குமாறு பிஜப்பூர் சுல்தானைத் தூண்டிவிட்டான். முதற் படையெடுப்பின் போது பிஜப்பூர்ப் படைகள் பெங்களூரை முற்றுகையிட்டன. வேங்கடன் வேறு வழியில்லாமல் ஒரு பெருந்தொகையைப் பிஜப்பூர் சுல்தானுக்குக் கொடுத்து 1639 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சமாதானஞ் செய்து கொண்டான்.

அந்த ஆண்டின் இறுதியில் தென்னகத்து நாயக்கர்கள் அனுப்பிய படைகளின் துணையோடு வேங்கடன் முஸ்லிம் படைகளை எதிர்த்து ஓரளவு வெற்றியடைந்தான். அதனால் முஸ்லிம்கள் சிறிது காலம் அவனுடைய ராஜ்யத்தைத் தாக்குவதை நிறுத்தி வைத்தார்கள்.

ஆனால், அவர்கள் மீண்டும் 1641 இல் படையெடுத்தார்கள். ரந்துலாக்கான் என்பவன் தலைமையில் வந்த அந்தப் படையுடன் சீரங்கனும் வந்தான். வழியிலிருந்த சில கோட்டைகளைக் கைப்பற்றிக்கொண்டு அவர்கள் வேலூரின்மீது தங்கள் படைகளைச் செலுத்தி, அங்கிருந்து பன்னிரெண்டு கல் தொலைவில் தங்கள் பாசறையை அமைத்துக்கொண்டார்கள். அப்போதும் தென்னகத்து நாயக்கர்கள் வேங்கடனுக்குத் துணைபுரிந்ததால் வேலூர் பகைவர் கையில் சிக்காமல்தப்பியது.

கர்நாடகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்த கோல்கொண்டா சுல்தான் ஒரு படையை அனுப்பி, கீழைக் கடற்கரையில் இந்து ராஜ்யத்திற்குச்சொந்தமான எத்தனை இடங்களைப் பிடிக்கமுடியுமோ அத்தனை இடங்களையும் பிடிக்குமாறு கட்டளையிட்டான். அந்தச் சமயத்தில் விஜயநகரப் பேரரசின் ஆயுள் முடிந்துகொண்டிருந்தது. அதன் இறுதிக்காலம் நெருங்கிவிட்டதென்பதை எல்லோருமே உணர்ந்தனர்.

நெல்லூரின் தென்கோடியில் ஆர்மகானுக்குத் தலைவனா யிருந்த வெலுகோட்டித் திம்மனும் மதராஸ், பூவிருந்தவல்லி ஆகிய இடங்களுக்குத் தலைவனாயிருந்த தாமெர்ல வேங்கடனும் கோல்கொண்டாவைப் படையை எதிர்த்தார்கள். ஆனால், அவர்களால் கோல்கொண் டாப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுக்க முடியவில்லை. மூன்றாம் வேங்கடன் தன்னுடைய தலைநகராகிய வேலூரிலிருந்து ஓடிச் சித்தூர் மாவட்டத்தில் நாராயண வரத்துக்கு அருகிலுள்ள காட்டில் ஒளிந்து கொண்டான். அங்கு அவன் 1641 அக்டோபர் 10 ஆம் நாளன்று இரங்கத்தக்க நிலையில், உதவுவார் யாரு மின்றி இறந்து போனான்.

மூன்றாம் வேங் கடனுக்குக் குழந்தையில்லாததால் அவனுக்குத் துரோகம் செய்த அவனுடைய தம்பி மகன் சீரங்கனே அரசனானான். வேங்கடன் மலைக்காட்டில் மரணப் படுக்கை யில் இருக்கிறான் என்று கேள்விப்பட்ட சீரங்கன் பிஜப்பூர்த் தளபதிகளிடமிருந்து நழுவித் தன்னுடைய முன்னோர்களின் நாட்டைப் பகைவர்களிடமிருந்து காக்கப் போவதாக விளம்பரப்படுத்திக்கொண்டான்.

பின்னர், 1642 அக்டோபர் 29 ஆம் நாள், அவன் அரசபதவியில் தன்னை அமர்த்திக் கொண்டான். ஆனால் எதிர்க்கட்சியில் சேர்ந்துகொண்டு அவனிழைத்த தீமையை அவனே அரசன் ஆனபின் சமாளிப்பது எளிதாக இல்லை.

தாமெர்ல வேங்கடன் செஞ்சிக் கிருஷ்ணப்ப நாயக்கன் போன்ற பிரபுக்கள் பலர் அவனை எதிர்த்தனர். ஆனால், முஸ்லிம் அரசர்க்கிடையில் இருந்த பொறாமை சிறிது காலம் அவனுக்கு உதவியாகஇருந்தது. அதனால், அவன் பிஜப்பூர் சுல்தானுடைய உதவியோடு,1644 ஜனவரியில் கோல்கொண்டாப் படைகளின் முன்னேற்றத்தைத் தடுத்து, அவை உதயகிரியைத் தாண்டிவராத வாறு செய்தான்.

அந்த வெற்றியின் விளைவாக அவன் சிறிது வலிமை பெற்றவனாதலால், தென்னக நாயக்கர்களிடம் பெருந் தொகைகளைக் கேட்கவும் அவற்றை வசூலிக்கவும் அவனால் முடிந்தது. அவ்வாறு வசூலான பணத்தைத் தனக்கு உதவி செய்த பிஜப்பூர் சுல்தானுக்குக் கைம்மாறாக அவன் கொடுத்தான். மதுரைநாயக்கனும்செஞ்சி நாயக்கனும் மீண்டும் கலகஞ் செய்தார்கள்.

இன்னுமொரு கோல்கொண்டாப் படை பழ வேற்காடு வரையில் எதிர்ப்பின்றி முன்னேறியது. சீரங்கனால் அதைத் தடுக்க இயலவில்லை. ஆனால், பழவேற்காட்டுக் கோட்டையிலிருந்த டச்சுத் தலைவன் அப்படையை வென்று துரத்தினான். செஞ்சி நாயகன் கோல்கொண் டாப் படை யுடன் சேர்ந்து கொள்ளக்கூடும் என்று அஞ்சிய சீரங்கன் அவனோடு சமாதானஞ் செய்து கொண்டான்.

பின்னர் அவன் கோல்கொண்டாப் படையை எதிர்த்து வெற்றிபெற்று அதனை நெல்லூர் மாவட்டத்தின் வடக்கில் உள்ள கண்டுக்கூர் வரையிலும் துரத்திக்கொண்டு சென்றான். ஆனால் பிஜப்பூரும் கோல்கொண்டாவும் தமக்குள் உடன்படிக்கை செய்துகொண்டதால் அந்த இரு ராச்சியங்களின் படைகளும் ஒன்றுகூடின.

அவற்றின் கூட்டு வலிமையை எதிர்த்து நிற்க இயலாத சீரங்கன் தன் படைகளுடன் பின்வாங்கினான். அதன்பின் கோல்கொண்டாவின் தளபதி மீர் ஜம்லா கர்நூல் வழியாக வேலூரின் மீது படையெடுப்பதற்கு தேவையான ஆயத்தங்களைச் செய்தான். அந்த நேரத்தில் கோல்கொண்டா சுல்தான் போரை நிறுத்துமாறு மீர் ஜம்லாவுக்கு திடீரென்று கட்டளையிட்டான். (தொடரும்)

---

# நிவாரணக் கிராமங்களில் தொற்றுநோய்கள் இல்லை

## வவுனியா அரச அதிபர்

(கொழும்பு)

நிவாரணக் கிராமங்களில் எந்தவித தொற்றுநோய்களும் இல்லையெனவும் நோய் பரவாமல் தடுக்க சகல முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வவுனியா அரச அதிபர் தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களுக்கு வரும்போதே பல்வேறு தொற்றுநோய்களுடன் வந்தவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தம் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவுக்கு வந்த மக்களிடையே மஞ்சட்காமாலை,தோல் நோய் மற்றும் பொக்குளிப்பான் போன்ற நோய்கள் இருந்தன. இவற்றைக் குணப்படுத்தும் வகையில் விசேட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான நோய்களைக் கொண்டோர் வேறாக்கப்பட்டு உரிய சிகிச்சைகள் வழங்கப்பட்டன. அதேநேரம் இத்தகைய தொற்றுக்கள் ஏனையோருக்கு பரவாமல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

மழைகாலங்களில் நோய்கள் பரவாமலிருப்பதற்காக சுற்றுச்சூழல்கள் துப்புரவு செய்யப்பட்டதுடன் நீர்தேங்கி நிற்பதைத் தடுக்கும் வகையில் வடிகான்கள் புனரமைக்கப்பட்டன. அத்துடன் மக்கள் தங்கியுள்ள கூடாரங்கள் திருத்தியமைக்கப்பட்டன.

இத்தகைய நடவடிக்கைகள் மூலம் தொற்றுநோய் பரவுவது தடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் நோய் பரவுவதைத் தடுப்பதற்கான முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் வவுனியா அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (ஓ-6)

# கிளி.,முல்லை.,மன்னார் மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் பாடசாலைகளை மீளவும் ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மடுப்பகுதியில் 11 பாடசாலைகளும் கிளிநொச்சியில் 9 பாடசாலைகளும் முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் வலயத்தில் 19 பாடசாலைகளும் வவுனியா மாவட்டத்தில் 15 பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-14)

# உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கிய மூன்று அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

படையினர் போர்க் குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக உண்மைக்குப் புறம்பான தகவல்களை வழங்கிய மூன்று அரச சார்பற்ற நிறுவன அதிகாரிகள் தொடர்பான தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

போர்க்குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக போலியான தகவல்களை அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் றொபேர்ட் ஓ பிளேக்கிற்கு இந்த் மூவரும் வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த மூன்று அரச சார்பற்ற நிறுவன உயரதிகாரிகள் பற்றிய தகவல்களை இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் திரட்டியுள்ளனர்.

இந்த அரச சார்பற்ற நிறுவனங்களது உயரதிகாரிகளில் இருவர் அமெரிக்காவிற்குச் சென்று றொபேர்ட் ஓ பிளேக்கை சந்தித்துள்ளதாகவும், ஏனையவர் இலங்கையில் வைத்து பிளேக்கைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

றொபேர்ட் ஓ பிளேக் அமெரிக்கத் தூதுவர் பதவியை விட்டு விலகும்போது நடைபெற்ற பிரியாவிடை வைபவத்திலும் இவர்கள் மூவரும் கலந்துகொண்டுள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர். (ஓ-6)

## கிழக்கு மாகாணத்தில் இயங்கும்

# ஆயுதக் குழுக்கள் ஆயுதங்களை ஒப்படைக்க மூன்று வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

கிழக்கில் இயங்கிவரும் ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதற்கு மீண்டுமொரு தடவை பொதுமன்னிப்பை அறிவித்து மற்றுமொரு சந்தர்ப்பம் வழங்க பாதுகாப்புத்தரப்பினர் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்பிரகாரம் எதிர்வரும் 3 வாரங்களுக்குள் ஆயுதங்களை ஒப்படைக்குமாறு ஆயுதக் குழுக்களுக்கு படைத்தரப்பினரால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.


மேலும் முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை தொடர்ச்சியாக மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு முஸ்லிம் ஆயுதக் குழுக்களிடம் பெரும் தொகையான ஆயுதங்கள் காணப்படுவதாகவும் அதில் ஓர் சிறியளவே இதுவரையில் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் எடிசன் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை முஸ்லிம் ஆயுதக் குழுவொன்றின் தலைவராக கஜீமட் என்பவர் ஆயுதங்களைக் கையளித்து சில தினங்களில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஓ-6)

# தமிழ் நாட்டிலுள்ள இலங்கை அகதிகளுக்கு புதிய குடியிருப்புகளை அமைத்து கொடுக்க வேண்டும்

## டாக்டர் ராமதாஸ் கோரிக்கை



(சென்னை)

இலங்கை அகதிகளுக்கு சமத்துவபுரங்கள் போன்ற குடியிருப்புகளை கட்டித்தர வேண்டும் என்று டாக்டர் ராமதாஸ் கூறியுள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

தமிழகத்தில் தங்கியிருக்கும் ஈழத் தமிழ் அகதிகளின் வாழ்க்கை நிலையை சுய மரியாதையான வாழ்வாக மாற்றி அதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். தாங்கள் உயிர் பிழைக்க அனுமதி தந்துள்ள மண்ணில் அரசுக்கு எதிராக போராட்டிப் பெற முடியாத நிலையில் அவர்கள் உள்ளனர்.

தங்களது பூமியில் என்றாவது ஒரு நாள் அமைதி திரும்பும் என்ற நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஈழத் தமிழ் மக்களுக்கு வழங்கப்படும் மானியமும் உணவும் போதுமானதாக இல்லை.

இதனால் ஏழ்மையான துன்பமான வாழ்வையே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அவல நிலையைப் போக்க அவர்களுக்கு வழங்கப்படும் அனைத்து மானியங்களும் உயர்த்தப்படவேண்டும், அவர்களின் சிவில் சமூக வாழ்வில் அனைத்து சுதந்திரங்களும் பேணப்படவேண்டும், அவர்களின் கல்வி பொருளாதார மேம்பாட்டிற்கு சிறப்பு நிதி உதவியுடன் தனி வாரியம் அமைக்க வேண்டும்.

இந்தியாவில் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ள திபெத்தியர்கள் நமது நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சுதந்திரத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

தமிழகத்திலும் ஈரோடு மாவட்டம் தாளவாடியையொட்டிய கர்நாடக எல்லைப் பகுதியில் திபெத்திய அகதிகளுக்கான குடியிருப்பு ஒன்று இருக்கிறது. அங்கே அவர்கள் சொந்த வீடுகளில் ஆரோக்கியமான சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அந்த குடியிருப்புகளோடு ஒப்பிடுகையில் இலங்கை தமிழர்களின் அகதி முகாம்களில் உள்ள குடியிருப்புகள் மிகக் கொடுமையானவை சமத்துவ புரங்கள் போன்று புதிய குடியிருப்புகளை அமைத்து இலங்கை தமிழ் அகதிகளை குடியமர்த்த வேண்டும் என்றார். (ஓ-6)

# தமிழர்கள் பகுதியில் இருபுறமும் சிங்களக் குடியேற்றம்

## உறவினர்கள் தெரிவித்ததாக அகதிகள் தகவல்

(தூத்துக்குடி)

மீள்குடியேற்றம் என்ற பெயரில் இலங்கையின் தமிழர் பகுதிகளில் சிங்களவர்கள் குடியமர்த்தப்படுவதாக தூத்துக்குடி முகாமிலுள்ள அகதிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடி ராமதாஸ் நகர் முகாமில் 54 குடும்பங்களைச் சேர்ந்த மொத்தம் 163 பேர் தங்கியுள்ளனர். அவர்களில் பலர் கூலி வேலை செய்து வருகின்றனர். இலங்கை தலைமன்னாரைச் சேர்ந்த குமரன் (29), அவுரான் (42) கூறுகையில்,

இனக் கலவரம் காரணமாக 1989 இல் இந்தியா வந்த நாங்கள் 1996இல் இம் முகாமிற்கு வந்தோம். இலங்கையில் மீள் குடியேற்றம் என்ற பெயரில் தமிழர்கள் பகுதியில் இருபுறமும் சிங்களவர்களை குடியமர்த்தி அவர்களது வீடுகளின் நடுவே தமிழர்களை அந்நாட்டு அரசு குடியமர்த்துகிறது. அது குறித்து அங்குள்ள எங்களது குடும்பத்தினர் உறவினர்கள் கவலையுடன் தெரிவித்தனர் என்றார். (ஓ-6)

# இலங்கை அகதிகள் முகாமுக்கு தமிழக அமைச்சர்கள் நேரில் சென்று ஆய்வு

(சென்னை)

முதல் அமைச்சர் கருணாநிதி உத்தரவின் படி, புழல் அகதிகள் முகாமில் துணை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆய்வு மேற்கொண்டு இலங்கை அகதிகளின் குறைகளை கேட்டறிந்தார். இதேபோல் தமிழகம் முழுவதும் உள்ள முகாம்களை அமைச்சர்கள் பார்வையிட்டு அகதிகளிடம் குறை கேட்டனர்.

முதல் - அமைச்சர் கருணாநிதி தலைமையில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தமிழ் நாட்டில் உள்ள இலங்கை அகதிகளின் மேம்பாட்டுக்காக உடனடியாக ரூ.12 கோடி செலவிடுவது என்று முடிவு செய்யப்பட்டது.

மேலும் அமைச்சர்கள் தங்கள் பகுதியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமுக்கு நேரில் சென்று பார்வையிட்டு அங்குள்ளவர்களின் குறைகளை கேட்டு எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று முதல் - அமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டார்.

அதன்படி அமைச்சர்கள் நேற்று முன்தினம் தங்கள் பகுதியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமுக்கு சென்று பார்வையிட்டு அவர்களுடைய குறைகளைக் கேட்டு அறிந்தனர். அமைச்சர்களுடன் மாவட்ட ஆட்சியாளர்கள் மற்றும் அதிகாரிகள் சென்று இருந்தனர்.

சென்னையை அடுத்த புழலில் உள்ள இலங்கை அகதிகள் முகாமில் கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் 433 குடும்பங்களைச் சேர்ந்த 1,119 ஆண்கள் மற்றும் பெண்கள் 329 சிறுவர்கள் தங்கி உள்ளனர்.



இவர்களுக்கு தமிழக அரசு சார்பில் வீடுகள் மற்றும் கழிப்பிட வசதியுடன் மாதாந்த சம்பளம் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

புழல் அகதிகள் முகாமிற்கு நேற்று முன்தினம் மாலை சுமார் 4.45 மணிக்கு துணை முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலின் சென்றார். முகாம்களில் உள்ள வீடுகளுக்குச் சென்று அகதிகளிடம் குறைகளைக் கேட்டு அறிந்தார். அங்குள்ள நூலகத்தையும் ஆய்வு செய்தார்.

அகதிகள் தங்களுக்கு வீடுகள் கட்டித்தரவும், குடிநீர் வசதி செய்து தரவும், கழிப்பிட வசதி செய்து தரவும் கோரிக்கைகளை வைத்தனர்.

மேலும் குழந்தைகள் படிப்பதற்கு தனியாக பள்ளிக்கூடம் அமைக்க வேண்டும். பிறப்பு சான்றிதழ் இங்கேயே பெற வசதி செய்ய வேண்டும்.

முகாமிலேயே தனியாக சங்கங்கடை அமைத்து நிவாரண பொருட்களை வழங்க வேண்டும் என்பன போன்ற பல்வேறு கோரிக்கைகளை வைத்தனர்.

முகாமில் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தால் சொந்த நாட்டுக்கு செல்லாமல் இங்கேயே நிரந்தரமாக வாழ்வோம் என்றும் துணை முதல் - அமைச்சர் மு.க. ஸ்டாலினிடம் இலங்கை அகதிகள் தெரிவித்தனர்.

அவர்கள் கோரிய அனைத்து வசதிகளையும் செய்து தருவதாக மு.க.ஸ்டா லின் உறுதி அளித்தார்.

பின்னர் நிருபர்களிடம் மு.க. ஸ்டாலின் கூறியதாவது,

தமிழகத்தில் 26 மாவட்டங்களில் 115 முகாம்களில் 73 ஆயிரத்து 401 அகதிகள் தங்கி உள்ளனர்.

அவர்களுக்கு அரசின் சார்பில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளது. மாதந்தோறும் பணக்கொடையும், உணவுப் பொருட்களும் வழங்கப்படுகின்றன.

அகதிகளின் அடிப்படை வசதிகளுக்காக மத்திய அரசிடம் பல்வேறு கோரிக்கைகள் வைக்கப்பட்டு ரூ. 16 கோடியே 18 இலட்சத்திற்கு மதிப்பீடு வழங்கப்பட்டு இருக்கிறது.

முகாம்களில் உள்ள அகதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக முதல் - அமைச்சர் கருணாநிதி தலைமையில் அமைச் சர்களும், அதிகாரிகளும் கலந்து கொண்ட சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

இதில், அரசின் சார்பில் உடனடியாக ரூ.12 கோடி செலவிடுவது என்றும் தமிழகத்தில் உள்ள அனைத்து முகாம்களையும் அந்தந்த மாவட்ட ஆட்சியர், அமைச்சர்கள் ஆகியோர் ஆய்வு செய்து அறிக்கை தயார் செய்து கொடுத்த பின் முகாம்களில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது.

இங்கு உள்ள முகாமில் இருப்பிடங்களை கட்டிடங்களாக பெரிதுபடுத்த வேண்டும். பிறப்பு சான்று, நிவாரணப் பொருட்கள், லைசென்ஸ் வேலை வாய்ப்புகள், கழிப்பிட வசதிகள் போன்றவற்றை செய்து தர வேண்டுமென கோரிக்கை வைத்துள்ளனர். இவைகள் அனைத்தும் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் இவ்வாறு மு.க.ஸ்டாலின் கூறினார். (ஓ-6)

## பாரதச் செய்திகள்

# இலங்கை கடற்படையை கண்டித்து நாடு தழுவிய போராட்டம்

## திருமாவளவன்

இலங்கை கடற்படையை கண்டித்து மீனவர்களை ஒருங்கிணைத்து நாடு தழுவிய போராட்டம் நடத்தப்படும் என்று விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவரும் எம்.பி.யுமான திருமாவளவன் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தியக் கடலிலே ஓரமாக மீன் பிடித்துக் கொண்டிருந்த புதுக்கோட்டை மற்றும் காரைக்காலைச் சேர்ந்த மீனவர்கள் 18 பேரை இலங்கை கடற்படையினர் சுற்றி வளைத்துக் கடத்தி சென்றுள்ளனர். சர்வதேச எல்லையைத் தாண்டி இந்திய எல் லைக்குள் அத்துமீறி நுழைந்து தமிழக மீனவர்களின் வலைகளை அறுத்துச் சேதப்படுத்தியுள்ளனர். பிடித்து வைத்துள்ள மீன்களையும் அவர் தம் 5 படகுகளையும் கைப்பற்றியதுடன் மீனவர்களையும் தாக்கியுள்ளனர்.

இதனை விடுதலைச் சிறுத்தைகள் மிகவும் வன்மையாக கண்டிப்பதுடன் கடத்தப்பட்ட 18 மீனவர்களையும் மீட்பதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டுமெனவும் வற்புறுத்துகிறது.

இந்நிலையில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சமூக தலைவர்களை ஒருங்கிணைத்து நாடு தழுவிய அளவில் போராட்டத்தை நடத்தும் என தெரிவித்துக் கொள்கிறோம் என்று கூறியுள்ளார். (ஓ-6)

# இலங்கை மீனவர்கள் 10 பேர் இந்திய கடல் எல்லையில் கைது

(சென்னை)

இந்திய கடல் எல்லை பகுதிக்குள் அத்துமீறி மீன் பிடித்த இலங்கை மீனவர்கள் 10 பேரை இந்திய கடலோர காவல் படையினர் கைது செய்தனர்.

இந்திய கடல் பகுதியில் கடலோர காவல் படையின் கப்பலான கங்காதேவி மற்றும் விமானம் ஆகியவை கடந்த திங்கட்கிழமை ரோந்து பணியில் ஈடுபட்டிருந்தன. அப்போது ஆந்திர மாநிலம் காக்கிநாடாவில் இருந்து வடகிழக்கே 100 கடல் மைல் தொலைவில் 2 படகுகளில் இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடித்தது தெரியவந்தது.

உடனே அங்கு விரைந்து சென்ற கடலோர காவல் படையினர் படகுகளில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இலங்கை மீனவர்களை சுற்றி வளைத்தனர். அந்த படகுகளில் மொத்தம் இலங்கை மீனவர்கள் 10 பேர் இருந்தனர். அவர்கள் அனைவரையும் கைது செய்த கடலோர பாதுகாப்பு படையினர் பின்னர் அவர்களை கரைக்கு அழைத்து வந்தனர். அவர்களின் 2 படகுகளும் பறிமுதல் செய் யப்பட்டன.

கைது செய்யப்பட்ட இலங்கை மீனவர்கள் 10 பேரும் நேற்று முன்தினம் மாலை சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஓ-6)

# க.பொ.த சாதாரண தரப் பரீட்சை-2009
# பயிற்சி வினாத்தாள் -கணிதம்

## பகுதி-II


A.Ramesh B.Sc (Hons)

### பகுதி B

01) i.காரணியாக்குக $2x^2-32$

ii $\lg 2 = a \lg 3 = b$ எனின் $\lg (3/4)$ இன் பெறுமானத்தை ab சார்பில் தருக.

iii.இணைகரம் ABCD யில் AB = (2x+3) DN=xcmஆகும்.




இணைகரத்தின் பரப்பளவு $40cm^2$ எனின் x இனது பெறுமானம் இருபடிச் சமன்பாடு $2x^2 + 3x40=O$ இலிருந்து பெறப்படும் எனக்காட்டுக.

2. இவ் இருபடிச்சமன்பாட்டை வர்க்க நிறைவாக்க முறையினால் அல்லது வேறு முறையால் தீர்த்து AB,CD இற்கிடையிலான செங்குத் துயரத் தைக்காண்க.

02) a)i. AO=7cm,$\hat{ABO}$ =30º,90 ஆகுமாறு முக்கோணி ABC யை வரைக.

ii. OB யின் நீளத்தைக் அளந்து எழுதுக.

iii $\hat{ABO}=\hat{OBC}$ ஆகுமாறும் AB=BC ஆகுமாறும் பக்கம் OB யுடன் $\hat{OBC}$ ஐ அமைக்க.

iv. Oவை மையமாகவும் OA ஐ ஆரையாகவும் உடைய வட்டத்தை அமைக்க

v.வட்டத்திற்கு B யிலிருந்து வரையத்தக்க இரு தொடலிகளைப் பெயரிடுக.

b) 1.நீர் அமைத்த உருவிலிருந்து

ii. OB நீளத்தையும் Sin 60º$\sqrt{3/2}$யையும் பயன்படுத்தி $\sqrt{3}$ இன் பெறுமதி காண்க.


iii. AC யை இணைத்து BAC இன் பெறுமானத்தைக் காண்க?

$\triangle$ABC யின் சுற்றளவைக் காண்க?

vi. A,B,C,D களினூடு செல்லும் வட்டத்தின் ஆரையை எழுதுக.

03) 80 உயரமான கலங்கரை விளக்கு ஒன்றின் உச்சியில் இருக்கும் நோக்குனர் ஒருவர் கடலில் புள்ளி B யிலே ஒள்ள ஒரு படகு ஒன்றை 12º 14' இறக்கக்கோணத்தில் காண்கிறார்.

அதேகணத்தில் படகிற்கு நேர்மேலே புள்ளி P யில் உள்ள ஆகாய விமானத்தை 18º,20' ஏற்றக்கோணத்தில் காண்கிறார்.




i. தரவுகளை வரிப்படத்தில் குறிக்க?

ii. படகிலிருந்து கலங்கரை விளக்கத்தின் அடிக்கு உள்ள தூரத்தைக் காண்க?

iii.நிலத்திலிருந்து ஆகாய விமானம் உள்ள உயரத்தைக் காண்க?

iv.அக்கணத்தில் விமானி கலங்கரை விளக்கத்தின் அடி h ஐ என்ன திசைகோளில் காண்பார்?

04) $y=3-(x-1)^2$ இன் வரைபை வரைவதற்கு x,y ஆகியவற்றின் பூரணமற்ற அட்டவணை கிழே காணப்படுகின்றது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| x | -2 | -1 | 0 | 1 | 2 | 3 | 4 |
| y | -6 | -1 | 2 | 3 | ......... | -1 | -6 |

a)i.இவ்வட்டவணையை உமது விடைத்தாளில் பிரதி செய்து வெற்றிடங் களை நிரப்புக?

ii.வரைபுத்தாளில் x அச்சு வழியேயும் y அச்சு வழியேயும் பத்து சிறு சதுரங்களால் ஓர் அலகு குறிக்குமாறு வரைபை வரைக?

b) உமது வரைபை பயன்படுத்தி

i. சார்பு $y=3-(x-1)^2$ இன் இழிவுப் பெறுமானத்தைக் காண்க?

ii. $(x-1)^2 -3 \leq o$ ஆகுமெனின் x இன் வீச்சைக் காண்க?

iii.சார்பானது இரு அலகுகள் இடதுபக்கமாக நகர்த்தப்படின் புதிய வளையியின் சமன்பாட்டை எழுதுக?

iv. $x^2-3x+1=0$ இன் மூலங்களைக் காண்க?

5) a) நீர்த் தடாகம் ஒன்றின் மேற்பரப்பில் பாசி காணப்படுகின்து. இப்பாசி ஒவ்வொரு நாளும் அதற்கு முதல் நாளில் இருந்த பாசியின் அளவின் 3 மடங்காகிறது. அவதானிக்கப்பட்ட முதலாவது நாளில் $2cm^2$ற்கு இப் பாசி படர்ந்திருந்தது.

i.முதல் 4 நாட்களிலும் தடாகத்தில் காணப்பட்ட பாசியின் அளவை எழுதுக?


ii.இது எவ்வகையான தொடராகும்?

iii. 7ஆவது நாளில் தடாகத்தில் காணப்பட்ட பாசியின் அளவை கணிக்க?

iv.இத்தடாகத்தில் மொத்த மேற்பரப்பு $13122cm^2$ ஆகும். இத்தடாகம் பாசியினால் முற்றாக மூட எத்தனை நாட்கள் தேவைப்படும்?

b) a,b எனும் எண்களின் கூட்டல் இடை $\frac{a+b}{2}$ ஆகும். இவ்வாறு a,b எனும் எண்களின் பெருக்கல் இடையைக் காண்க?

(6)




வட்டம் ஒன்றின் வில் தொடர்பாக மையக்கோணம், பரிதிக்கோணம் பற்றிய தொடர்பைக் காட்டும் தேற்றத்தைக் எழுதுக.

உருவில் o சிறிய வட்டத்தின் மையமாகும் ஆகும். $\hat{APB} = 18^0$ எனின்

a) பின்வரும் கோணங்களை கணிக்க

i. $\hat{AOB}$

ii.$\hat{ACB}$

iii.$\hat{COB}$

b) பின்வருவனவற்றை நிறுவுக

i. $\Delta$CQB ஓர் இரு சம பக்க முக்கோணி

ii. QB//AP

## பயங்கரவாதமும் பிரிவினை வாதமும்

# தோற்கடிக்கப்பட்டாலும் அதற்கான காரணங்களுக்கு தீர்வு காணப்படவில்லை

## மனோ கணேசன் எம்.பி.



(கொழும்பு)

பயங்கரவாதமும் பிரிவினைவாதமும் தோற்கடிக்கப்பட்டு விட்டாலும் அதற்கான காரணங்களுக்கு தீர்வுகள் எட்டப்படவில்லை.

தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியிலான பிரச்சினைகள் இருக்கின்றன. இல்லை என்று கூறுபவர்கள் முட்டாள்கள். ஐக்கிய தேசிய முன்னணியில் தமிழ் மக்களின் அபிலாஷைகள் வென்றெடுக்கப்படும் என்ற நம்பிக்கை இருப்பதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எந்தத் தேர்தலை வேண்டுமானாலும் நடத்தட்டும். எதற்கும் நாம் தயாராகவே இருக்கின்றோம்.

கடந்த காலங்களில் வாக்குரிமை பறிக்கப்பட்ட வடக்கு மக்கள் இன்று ஐக்கிய தேசிய முன்னணியை ஆட்சியிலமர்த்த தயாராகி விட்டார்கள். அவர்களது பூரண ஆதரவு எமக்கே இருக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

ஐக்கிய தேசிய முன்னணி அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றக் கட்டிடத் தொகுதியில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மனோ கணேசன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

1977 ஆம் ஆண்டில் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜே. ஆர் ஜயவர்த்தன, வடக்கில் ஒரு பிரிவினைவாதம் தோற்றம் பெற்று வருவதாக அன்றே கூறியிருந்தார்.

இதனை மேலும் வளரவிடாதிருப்பதற்காக சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்றன. யுத்தங்களும் நடத்தப்பட்டன.

ஜே. ஆர். முதல் மஹிந்த வரையில் இவ்வாறு இரண்டு விடயங்களும் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது பயங்கரவாதத்துக்கும் பிரிவினை வாதத்துக்கும் முடிவு கட்டப்பட்டுள்ளது.

இதன் வெற்றியை இன்றைய அரசாங்கம் மட்டுமே உரிமை கோரவும் முடியாது. அதில் ஐக்கிய தேசியக்கட்சியும் பிரதான பங்கு வகிக்கின்றது.

இருப்பினும், இந்த பயங்கரவாதமும் பரிவினைவாதமும் தோற்றம் பெறுவதற்கான நியாயப்பாடுகள், காரணங்கள் இன்னும் கிடப்பில் போடப்பட்டுள்ளன. இது தொடர்பில் அக்கறை காட்டப்படாதிருக்கின்றது. எமது தமிழ் சமூகத்திற்கு பிரச்சினைகள் இருக்கின்றன.

எமது மக்கள் துன்பப்படுகின்றனர். துயரம் அனுபவிக்கின்றனர். இந்த நிலைமைகளை மாற்றியமைப்பதற்கான தேவை ஜனநாயக மக்கள் முன்னணிக்கு இருக்கின்றது.

எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவும் தந்தை செல்வநாயகமும் கூட தமிழர் பிரச்சினைகள் தொடர்பில் சமரசம் பேசினார்கள்.

ஆனாலும், தீர்வுகள் எட்டப்படவில்லை. இந்த நிலைமை உணரப்பட்டதன் அடிப்படையிலேயே எமது கட்சி ஐக்கிய தேசிய முன்னணி யில் இணைய வேண்டிய தேவை ஏற்பட்டது.

அது மட்டுமல்லாது பிரிவினையற்ற ஐக்கிய இலங்கைக்குள்ளேயே எமது அரசியல் அபிலாஷைகளை மற்றும் உரிமைகளை வென்றெடுக்க வேண்டிய சூழலும் உருவாகியுள்ளது.

அந்த வகையில் ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் என்ற இணைவின் ஊடாக எமது உரிமைகளை நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (ஓ-6)

## வவுனியா வைத்தியசாலையில் 200 கட்டில் கொண்ட புதிய வார்ட்

வவுனியா வைத்தியசாலையில் 200 கட்டில்கள் கொண்ட புதிய வார்ட் ஒன்று அமைக்கப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வவுனியா போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற தாதிமார் மற்றும் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். வவுனியா போதனா வைத்தியாசாலையில் 18 மில்லியன் ரூபா செலவில் புதிதாக அமைக் கப்பட்ட மகப்பேற்று வார்ட் மற்றும் 10 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மார்புச் சிகிச்சைப் பிரிவு கட்டடம் ஆகியன அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மற்றும் ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டன. (ஓ-6)

## இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்த அறிக்கை

### யோலென்டா பொஸ்டரிடம் ஜயலத் கையளிப்பு

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவது குறித்த எதிர்க்கட்சித் தலைவரின் அறிக்கையொன்றை ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெற்காசிய வலயத்திற்குப் பொறுப்பான யோலென்டா பொஸ்டரிம் கையளித்துள்ளார்.

பிரித்தானியாவிலுள்ள சர்வதேச மன்னிப்பு சபையின் தலைமையகத்தில் கடந்த 30 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பின் போதே இவ் அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கையிலிருந்து வெளியேறி பிரித்தானியாவில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள ஏராளமான ஊடகவியலாளர்கள் உட்பட ஐ.தே.கட்சியினர் கலந்து கொண்டனர். (ஓ-6)

## 'ஐக்கிய தேசிய முன்னணி' மக்கள் அரசாங்கத்தை உருவாக்கும்

### ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பதிலாக மக்கள் அரசாங்கமொன்றை கட்டியெழுப்பும் நோக்கில் எதிர்க்கட்சிகளின் விரிவான கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் விரிவான கூட்டமைப்பாக ஐக்கிய தேசிய முன்னணி உருவாக்கப்பட்டதன் பின்னர் அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

குடும்பவாத அரசியலை இல்லாதொழித்து மக்கள் ஜனநாயகமிக்கதோர் அரசியலை கட்டியெழுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளமை நாள்தோறும் வெளியாகும் செய்திகளின் மூலம் தெளிவாக புலப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு அகதிகளை தடுத்து வைத்திருத்தல், தொழிற்சங்கங்களை அடக்கு முறைக்கு உட்படுத்தல், பொலிஸாரின் அராஜகம், ஊடக அடக்கு முறை என தற்போதைய ஆட்சியாளர்களின் ஜனநாயக விரோத செயல்களை பட்டியலிட முடியும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சகல மக்களையும் சமமாக மதிக்கக் கூடிய ஓர் சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-6)

## இராணுவத் தளபதிக்கும் இலங்கைக்கான அமெ. தூதுவருக்குமிடையில் விசேட சந்திப்பு

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜெகத் ஜயசூரியவிற்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பெற்றீஷியா புட்டினாஸிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்புப் பிரிவு பொறுப்பாளர் லெப்டினன்ட் கேணல் லோரன்ஸ் ஸ்மித்தும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டுள்ளார்.

தற்போதைய பாதுகாப்பு நிலைமைகள், வடக்கு கிழக்கு அபிவிருத்தி தொடர்பாக இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் விசாரணை நடத்தப்படவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ள சந்தர்ப்பத்தில் அமெரிக்கத் தூதுவர் இலங்கை இராணுவத் தளபதியை சந்தித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

## மீள்குடியேற்றம் இடம்பெறும் பகுதிகளில் கடமைக்கு திரும்பத் தவறும் அரச அலுவலர்களின் கொடுப்பனவுகள் ரத்து

### வடமாகாண ஆளுநர் எச்சரிக்கை

(கொழும்பு)

வட பகுதியில் மீள் குடியேற்றம் இடம் பெறும் பகுதிகளிலுள்ள கிராம சேவகர்கள் உட்பட அனைத்து அரசாங்க உத்தியோகத்தர்களும் உடனடியாக கடமைக்கு திரும்ப வேண்டும் என வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி பணிப்புரை விடுத்துள்ளார்.

குறிப்பிட்ட நேரத்தில் கடமைக்குத் திரும்பத் தவறும் அரச ஊழியர்களின் கொடுப்பனவுகள் ரத்து செய்யப்படும் என அவர் மேலும் எச்சரிக்கை விடுத்துள்ளார். மக்களை மீளக் குடியமர்த்துவதை துரிதப்படுத்துவதற்கும், குடியமர்த்தப்பட்ட மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை பூரணப்படுத்திக் கொடுப்பதற்கும் அதிகாரிகள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும் எனவும் ஆளுநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு இணங்க வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் வடபகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி பணிகளின் முன்னேற்றங்கள், குறைபாடுகள் குறித்து ஆராய்வதற்கென விசேட கூட்டமொன்று நேற்று முன்தினம் திருமலையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார். (ஓ-6)

## கனடாவில் கப்பலுடன் கைதாகியோரின் உடைகளில் வெடி பொருட்கள்

### நாட்டுக்கு அச்சுறுத்தல் என்கிறார் குடிவரவு அதிகாரி

(கொழும்பு)

இலங்கையர் 76 பேருடன் கனடாவில் கைது செய்யப்பட்ட கப்பலின் உண்மையான பெயர் பிறின்ஸ்சங் ஈஸ்வரி என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலின் பெயர் ஏசியன் வேற் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் கப்பல் தொடர்பான பல புதிய தகவல்களைக் கனடா நசனல் போஸ் செய்தித்தாள் வெளியிட்டுள்ளது.

அந்தக் கப்பலில் பிரதானமாக வெடி பொருட்கள் ஏற்றிச் செல்லப்பட்டுள்ளதாக செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வெடிபொருட்கள் குறைந்த அளவுடையதாகக் காணப்பட்ட போதிலும் அவை அந்தக் கப்பலில் பயணித்தவர்களின் உடைகளிலேயே காணப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை இந்த நடவடிக்கையானது தனது நாட்டுக்கு பாரிய அச்சுறுத்தலாக விளங்குவதாக கனடிய குடிவரவு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஓ-14)

# இன்று ஒரு தகவல்

## சகாதேவன் வழங்கிய நீதி

ஆன்மீகச் சொற்பொழிவாளர் ஒருவர், "ஒரு ஞானி எப்படியிருப்பார்?" என்ற கேள்விக்கு விளக்கம் கொடுத்தார்.

"ஞானி எப்படி இருப்பார் என்று கேட்டால், மகாபாரதத்தில் வரும் சகாதேவன் போன்று இருப்பார்" என்பது அவருடைய பதில்.

ஒரு ஞானி நீதியை மட்டும் தான் பார்ப்பார். அது தன்னுடைய சொந்தக்காரர்களையோ, தனக்கு வேண்டியவர்களையோ எப்படிப் பாதிக்கிறது என்பதைப் பற்றி அவர் கவலைப்படமாட்டார்.

அவருக்கு நீதி மட்டும்தான் முக்கியம்.

சகாதேவன் அதற்குச் சரியான ஓர் உதாரணம் தான். கிருஷ்ணன் தூது போவதற்கு முன் பஞ்ச பாண்டவர்களை அழைத்து அவர்களின் கருத்தைக் கேட்கிறார்.

"யுத்தமே வேண்டாம்" என்கிறார் தருமர்.

பீமன், அர்ஜுனன், நகுலன் ஆகியோர் "யுத்தம் வேண்டும்!" என்கிறார்கள்.

அதன்பின் கிருஷ்ணன் சகாதேவனிடம் சென்று "நீ என்ன சொல்கிறாய்?" என்று கேட்கிறார்.

அதற்கு சகாதேவன் "கிருஷ்ணா, உன்னுடைய கருத்து எதுவோ அதுதான் என்னுடைய கருத்தும்" என்று கூறிவிட்டான்.

சகாதேவனுக்கு, "கண்ணன் விருப்பப்படி தான் எல்லாம் நடக்கப் போகிறது" என்பது தெரியும்.

தான் போருக்கு ஏற்பாடு செய்வது சகாதேவனுக்குப் புரிந்து விட்டது என்பதை கண்ணன் உணர்ந்து கொண்டார்.

"உன் கூந்தலை நானே முடிக்கிறேன்" என்று திரௌபதிக்கு வாக்குக் கொடுத்த கண்ணன் போருக்கு ஏற்பாடு செய்யாமல் இருக்க முடியுமா?

என்றாலும் "பாரதப் போர் நடைபெறாமல் இருக்க என்ன வழி?" என்று சகாதேவனிடம் வினவினார் கண்ணன்.

அதற்கு சகாதேவன் கூறிய பதில் என்ன தெரியுமா? "பாரதப் போர் நடைபெறாமல் இருக்க வேண்டும் எனில் கர்ணனுக்கு முடி சூட்ட வேண்டும். அதற்கு முன் அர்ஜுனனைக் கொல்ல வேண்டும். பின் திரௌபதியின் கூந்தலை முடிக்க வேண்டும்" என்றான் சகாதேவன்.

கர்ணன், பஞ்சபாண்டவர்களுக்கு வேண்டாத எத்தனையோ காரியங்களைச் செய்தவன், அப்படியிருந்தும், "கர்ணனுக்கு முடி சூட்ட வேண்டும்" என்று சகாதேவன் ஏன் கூறினான்.

கர்ணனுக்கு முடி சூட்டினால் துரியோதனன் "வேண்டாம்" என்று சொல்ல மாட்டான். அதற்கு தர்மரும் சம்மதிப்பார்.

ஏனென்றால் தர்மரைப் பொறுத்தவரையில் எப்படியோ போர்வராமல் இருந்தால் சரி ; கர்ணன் தன் தமையன் என்று தெரிந்ததும் அவர் இன்னும் மகிழ்ச்சியடைவார்.

அது சரி... அர்ஜுனனை ஏன் கொல்ல வேண்டும்? அர்ஜுனன் கர்ணனின் பரமவிரோதி. அவன் கர்ணனுக்கு முடி சூட்டுவதற்கு சம்மதிக்கமாட்டான். அதனால் அர்ஜுனனை முதலில் கொல்ல வேண்டும்.

சரி... திரௌபதியின் கூந்தலை ஏன் முடிக்க வேண்டும்?

அவள், "என் கூந்தலை முடிய மாட்டேன் என்று சபதம் எடுத்தாள் அல்லவா? அதனால் அவளது சபதத்தை நிறைவேற்ற வேண்டும். இதுதான் சகாதேவன் சொன்ன பதிலுக்கு விளக்கம்.

இப்போது யோசித்துப் பாருங்கள்...

சகாதேவன் நீதியைத் தான் பார்த்தான். தன் பதிலால் சொந்த பந்தமெல்லாம் எந்த அளவிற்குப் பாதிக்கப்படும் என்பதைப் பற்றி அவன் கவலைப்படவில்லை. ஞானிகள் இப்படித்தான் இருப்பார்கள் என்று அந்த ஆன்மீகச் சொற்பொழிவாளர் குறிப்பிட்டார்.

அவர் சொல்வது சரிதான்... அதற்காகச் சொந்த பந்தங்களைப் பற்றி கவலைப்படாதவர்கள் எல்லாம் ஞானிகள் என்று நாம் நினைத்துவிட முடியாது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சகல அரச ஊழியர்களுக்கும் ஜனவரி மாதம் முதல் இரண்டு மாத நிலுவைகளுடனான சம்பள உயர்வு

## ஜனாதிபதி உறுதி



(கொழும்பு)

அடுத்த ஜனவரி மாதம் முதல் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் இரண்டு மாத நிலுவைகளுடனான சம்பள உயர்வு வழங்கப்படுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

புதியதொரு வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக சம்பள உயர்வு வழங்கப்படும் எனவும் நவம்பர் டிசம்பர் ஆகிய இரு மாதங்களுக்கான நிலுவையும் பெற்றுத்தரப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்தார்.

அலரி மாளிகையில் ஜனாதிபதி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரத் தொழிலாளர் சங்கத்தின் ஏழாவது தேசிய சம்மேளனத்திலேயே அவர் இவ்வாறு அறிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை நவம்பரில் சமர்ப்பிக்கவிருந்தேன்.

எனினும் புதிய பாராளுமன்றத்திற்கு முன் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்து அதனைப் பாராளுமன்றத்தில் கட்டிப்போட வேண்டாமெனக் கூறினார்கள். அதனை நான் ஏற்றுக் கொண்டேன்.

இருந்தாலும் ஊழியர்களின் நலனை கவனிப்பதற்கு ஒரு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற வகையில் புதிய பாராளுமன்றம் வரை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஜனவரி மாதம் நிச்சயம் சம்பள உயர்வைப் பெறுவீர்கள். இரண்டு மாத நிலுவையும் கிடைக்கும்.

இதனைத் தான் இதற்கு முன்பும் கூறினேன் எனினும் சம்பந்தப்பட்டவர்களை எனது அறிவிப்பு சரியாக சென்றடையவில்லை.

அதே நேரம் 180 நாள் வேலை செய்த அனைவரையும் நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

இரண்டு தேர்தல்களில் எது முதலில் வரும் எனச் சிலர் கேட்கிறார்கள். சிலர் ஒரு தேர்தலைக் கூறுகிறார்கள்.

என்னவானாலும் எதிர்வரும் 15 ஆம் திகதி சுதந்திரக் கட்சியின் சம்மேளனத்தில் எந்தத் தேர்தல் என அறிவிப்பேன்! என்று ஜனாதிபதி கூறியதும் மாநாட்டில் கலந்து கொண்டவர்கள் ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு ஒருமித்த குரலில் கேட்டுக் கொண்டார்கள். சரி உங்கள் கருத்தை அறிந்து விட்டேன்.

மாகாண சபை மற்றும் பிராந்திய தலைவர்கள் மற்றும் மக்களிடமும் கருத்தைக் கேட்பேன்.

ஆனால் எனக்கு இன்னும் இரண்டு ஆண்டுகள் உண்டு. மக்களுக்காக 2 வருடங்களைத் தியாகம் செய்யவும் தயார் என்றார். (ஓ-6)

# திறமைச் சான்றிதழ் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 80 புள்ளிகளுக்கு மேல் பெறும் மாணவர்களுக்கு திறமைச் சான்றிதழ் வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். (ஓ-4)

# பிரிட்டனுக்கான விசா விண்ணப்பங்கள் 5 நாட்களுக்கு இடை நிறுத்தம்

## பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் அறிவிப்பு

(கொழும்பு)

பிரிட்டனுக்கான புதிய விசா விண்ணப்பங்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 23 ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

புதிய விசா விண்ணப்பங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை வரை ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அதன் பின்னர் விசா விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் நடவடிக்கைகள் மீண்டும் எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையே ஆரம்பமாகும் என்றும் உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. (ஓ-6)

# இராசி பலன்

*05.11.2009*

*(ஐப்பசி 19 வியாழக்கிழமை)*

*திருதியை முன்னிரவு 9.44 மணிவரை*

*ரோகிணி முன்னிரவு 6.41 மணிவரை*

*இராகுகாலம் 1.34-3.04 மணிவரை*

*சுபநேரம் 7.34-9.04 மணிவரை*

| | |
|---|---|
| மேடம் | போசன சுகக்குறைவு, வேலைச் சுமை, மனோ சங்கடம், முயற்சி தாமதம். |
| இடபம் | வெகுமானம், மாதர்நட்பு, உடல் நலம், தெய்வசிந்தை. |
| மிதுனம் | மனச்சோர்வு, பிறருக்கு உதவுதல், சயன சுகக்குறைவு, தன விரயம். |
| கடகம் | தனதானிய சேர்க்கை, சயன சுகம், தடைப்பட்ட காரியம் கைகூடும், கீர்த்தி. |
| சிங்கம் | எடுத்த காரியம்கைகூடும், நல்ல தகவல், போசன சுகம், உறவினர் சந்திப்பு. |
| கன்னி | கட்டுப்பாடு, பித்த ரோகம், பிரயாணம், முயற்சி தாமதம். |
| துலாம் | தர்மம், காரிய தடங்கல், மனச் சஞ்சலம், போசன சுகம். |
| விருச்சிகம் | நல்ல வரவேற்பு , தனலாபம், போசன சுகம், தன்னம்பிக்கை. |
| தனுசு | தொழில் நன்மை, நல்ல சம்பவம், முயற்சி கைகூடும், தனலாபம். |
| மகரம் | வியாபார நன்மை, மனச்சஞ்சலம், ரோகநிலை, முயற்சி தாமதம். |
| கும்பம் | மனச்சஞ்சலம், முயற்சி தாமதம், நல்ல செய்தி, போசன சுகம். |
| மீனம் | உறவினர் வருகை, நல்ல செய்தி, காரிய அனுகூலம், தனலாபம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 90 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 50 |
| தக்காளி | 70 | 80 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 40 | 50 | 50 |
| கரட் | 50 | 70 | 60 |
| பூசணி | 25 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 40 |
| வாழைக்காய் | 75 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 70 | 90 | 70 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 70 | 80 | 80 |
| வெண்டிக்காய் | 20 | 30 | 40 |
| கரணைக் கிழங்கு | 20 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 70 | 60 |
| லீக்ஸ் | 110 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 50 | 40 |
| கறிமிளகாய் | 80 | 100 | 120 |
| முருங்கைக்காய் | 120 | 140 | 140 |
| கீரை - 1 பிடி | 15 | 20 | 20 |
| தேசிக்காய் | 180 | 220 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35-40 | 35 |

# ராகு கேது பெயர்ச்சி பலன்கள்

# 27.10.2009 முதல் 08.06.2011 வரை



## மகரம்

**(உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 பாதம் வரை)**

கிடைக்கும் சந்தர்ப்பங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று எடுத்துரைக்கும் மகர ராசி நேயர்களே!

பழைமையை விரும்பும் நீங்கள் புதுமையை எளிதில் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள்.எளிமை உங்கள் உடலில் இருக்கும். இனிமை உங்கள் பேச்சில் இருக்கும். ஞாபக சக்தி அதிகம் கொண்டவர்கள் நீங்கள். யார் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொள்ளும் மனோபாவம் உங்களுக்கு உண்டு. உறவும் பகையும் மாறி மாறி வந்து கொண்டேயிருக்கும்.

என்ன நடந்தாலும் சரி அதை ஏற்றுக் கொண்டு விடுவோம் என்று முடிவெடுத்து விடுவீர்கள். கிக்கனத்தைக் கடைபிடிப்பதை வலியுறுத்துவீர்கள்.தானங்களில் சிறந்த நிதானத்தை நீங்கள் கடைப்பிடிப்பதால் தான் நினைத்ததை அடைய முடிகிறது. நல்ல வாய்ப்புகளை கோபத்தினால் இழக்க கூடிய சூழ்நிலை உங்களுக்கு ஏற்படும். அதன் பின் ஆஹா இப்படிச் செய்து விட்டோமே? என்று வருத்தப்படுவீர்கள்.

எல்லா நெளிவு சுழிவுகளையும் தெரிந்து வைத்திருப்பீர்கள். சோதனைகளை சாதனைகளாக மாற்றக் கூடிய ஆற்றல் உங்களுக்கு உண்டு.இப்படிப்பட்ட சிறப்பு வாய்ந்த குணங்களைப் பெற்ற உங்களுக்கு இந்த ராகு கேது பெயர்ச்சி எப்படிப் பட்ட மாற்றங்களை எல்லாம் வழங் கப் போகிறது என்பதைப் பற்றி பார்ப்போம்.

**கொடுக்கல் வாங்கல்களை ஒருங்கு செய்யும் கோதண்ட ராகு!**

**ஆற்றலைப் பளிச்சிட வைக்கும் ஆறாமிடத்து கேது!**

இதுவரை மகர ராசியில் சஞ்சரித்து வந்த ராகுவும் கடக ராசியில் சஞ்சரித்து வந்த கேதுவும் தனது வான்வெளிப் பயணத்தில் 27.10.2009 அன்று பின்னோக்கி வந்து உங்கள் பிரச்சினைகளுக்கு வடிகால் அமைக்கப் போகிறது. என்னதான் இதுவரை ஜென்மத்தில் சஞ்சரித்து வந்த ராகு நல்ல பலன்களைக் கொடுத்திருந்தாலும் உடல் நிலையில் சிறு சிறு பிரச்சினைகளை தந்திருக்கலாம். உறவினர் பகைகளையும் ஏற்படுத்தி இருக்கலாம். இரவு பகலாக பாடுபட்டதற்கேற்ற பலன்களை கிடைக்க விடாமல் தடுத்திருக்கலாம். அந்த நிலை இனி மாறும் வகையில் அதிசயிக்கத்தக்க மாற்றங்கள் இனி வரப்போகின்றன.

பன்னிரெண்டாமிடத்தில் சஞ்சிரிக்கும் ராகு பயணங்களால் பலன் கிடைக்க வைக்கும் தூர தேசத்தில் இருந்து ஒரு சிலருக்கு அழைப்புகள் வந்து சேரலாம். வரும் அழைப்புகளை தெசா புத்தி பலம் பெற்றவர்கள் உப யோகப்படுத்திக் கொள்ளலாம். விரயங்கள் அதிகரிக்கும். எனவே அவற்றை சுப விரயங்களாக மாற்றிக்கொள் வது நல்லது. காது குத்து முதல் கல்யாண வாய்ப்பு வரை சுபகாரியங்கள் வந்து அலை மோதும். தங்கம் வெள்ளி மற்றும் விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதற்கு உகந்த நேரமிது. நீங்கள் எந்தத்துறையைச் சார்ந்தவராக இருந்தாலும் அதில் திறமையைக் காட்டி பெருமையைப் பெறப் போகிறீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு அருகில் இருப்பவர்களால் ஏற்பட்ட ஆபத்து அகலும் என்றாலும் அதிகாரிகளைப் பொறுத்த வரை கவனத்துடன் இருப்பதே நல்லது.

வீடு கட்டும் முயற்சியில் அல்லது வாங்கும் முயற்சியில் விரயங்களைச் செய்யலாம் பிள்ளைகளின் கல்வி நலன் கருதி விரயங்களைச் செய்யலாம் குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து அவர்களின் கோபத்திலிருந்து விடுபடலாம்.

ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் கேது ஆரோக்கியத்தில் திடீர் திடீரென தாக்குதல் களை உருவாக்கி நிவர்த்தி செய்யும் என்பதாலும் பல நல்ல வாய்ப்புகளை கைநழுவ வைத்து விடும் என்பதாலும் உங்கள் சுய ஜாதகத்தில் ராகு-கோதுக்கள் இருக்கும் நிலையறிந்தும் அதனைப் பார்க்கும் கிரகத்தின் பலம் அறிந்தும் யோக பலம் பெற்ற நாளில் சர்ப்ப சாந்திகை முறையாகச் செய்து கொள்வது நல்லது.

கேதுவின் பலத்தால் கடன் சுமை கூடலாம். இருப்பினும் புதிய கடன்களும் உங்களுக்கு கிடைக்கும் பொருளாதார நிலை உயரும் என்றாலும் ஒருவருக்கேனும் கடன் பாக்கிகளை வைத்திருப்பீர்கள். எதிரிகளின் பலம் கூடும் என்பதால் இந்த நேரத்தில் நண்பர்கள் உங்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக இருப்பார்களா? என்பது சந்தேகம் தான் நீங்கள் நண்பர்களிடம் சொல்லிய தகவல்கள் முறையாக யாரிடம் போய் சேர வேண்டுமோ அவர்களிடம் போய் சேர்ந்து நீங்கள் அந்தக் காரியத்தை முடிப்பதற்கு முன்னால் அவர்கள் அந்தக் க்காரியத்தை முடித்து விடுவர். எனவே பகை உருவாகலாம் பகை நட்பாக விநாயகப்பெருமான் வழிபாடு உங்களுக்கு அவசியம் தேவை.

ஒக்டோபர் 27 இல் என்பது உங்கள் மனதில் பதித்து வைத்துக்கொள்ள வேண்டிய மறக்க முடியாத நாள். அன்றைய தினம் தான் ராகு என்ற மாபெரும் கிரகம் உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு அஷ்டமாபதியாக விளங்கும் சூரியனின் சாரத்தில் முதலில் சஞ்சரிக்கிறார். எனவே எதிலும் கூடுதல் விழிப்புணர்ச்சி உங்களுக்குத் தேவை.

சிறிய காரியமாக இருந்தாலும் சரி ,பெரிய காரியமாக இருந்தாலும் சரி கவனம் செலுத்தாவிட்டால் காரியம் முடிவடைவதில் தாமதம் ஏற்பட்டுக்கொண்டேயிருக்கும். இழப்புகளையும் விரையங்களையும் அதிகம் சந்திக்கும் இந்த நேரத்தில் இனம் புரியாத கவலை உருவாகும். பொதுவாக புது முயற்சிகளை தள்ளி வைப்பது நல்லது. வாகனங்களில் செல்லும் பொழுது வழியில் விழிப்புணர்ச்சி தேவை. பழைய வாகனங்களை கொடுத்து விட்டு புதிய வாகனங்களை வாங்குவது நல்லது.

மாற்றுக்கருத்துடையோர்களின் எண்ணிக்கை கூடும். இந்த நேரத்தில் வீட்டில் உள்ளவர்களோடும் மோதல் ஏற்படலாம். வெளியில் உள்ளவர்களோடும் மோதல் ஏற்படலாம். எனவே சூரிய வழிபாட்டில் கவ னம் செலுத்துங்கள். சுகங்களும் சந்தோஷங்களும் வந்து சேரும். உத்தியோகத்தில் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்கள் அங்கு சிக்கல்கள் இருப்பது தெரிந்து மீண்டும் பழைய இடத்திற்கே வந்து சேரும் சூழ்நிலை உருவாகும்.

அஷ்டமாதிபதி காலில் ராகு சஞ்சரிக்கும் பொழுது வீண் பழிகள் வந்து சேரும் என்பதால் நண்பர்களிடமும் உடன் இருப்பவர்களிடமும் யோசித்து தகவல்களைச் சொல்வது நல்லது.

அதே நேரத்தில் புனர்பூச நட்சத்திரக் காலில் வியாழனின் சாரத்தில் கேது சஞ்சரிக்கத் தொடங்குகிறார். 26.05.2010 வரை குரு காலில் தான் கேது சஞ்சரிக்கிறார். குரு உங்கள் ராசிக்கு சகாய ஸ்தானதிபதியாகவும் விரய ஸ்தர்னதிபதியாகவும் விளங்குவதால் விரயத்திற்கு ஏற்ற இலாபம் வந்து சேரும்.

உடன் பிறப்புகளுக்காக ஒரு தொகையை செலவிடுவீர்கள். தொழிலுக் காகவோ அவர்களின் இல்லத்தில் நடைபெறும் விழாக் களுக்காகவோ கடனாகக் கொடுத்து உதவும் சூழ்நிலை அமையும்.பூர்வீகச் சொத்துக்கள் சம்பந்தமான பஞ்சாயத்துக்களில் விட்டுக் கொடுத்துச்செல்வது நல்லது. தொழில் ரீதியாக எடுத்த முயற்சிக்கு புதிய பங்குதாரர்கள் வந்து இணைவர் இட விற்பனையால் ஆதாயமும் கிடைக்கும்.

30.09.2010முதல் 08.06.2011 வரை மூல நட்சத்திரத்தில் கேது காலில் ராகு சஞ்சரிக்கிறார். அதே நேரத்தில் 4 , 11 க்கு அதிபதியான செவ்வாயின் காலில் கேது சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக வளர்ச்சி கூடும். வருமானம் திருப்தி தரும், நினைத்ததை நினைத்த மாத்திரத்தில் செய்து முடிப்பீர்கள். கல்யாண வாய்ப்புகள் கைகூடும். இனிய செய்திகள் இல்லம்தேடி வரும்.

எதிர்பாராத தனலாபம் வரும் இந்த நேரத்தில் இதைச் செய்வோமா ? அதைச் செய்வோமா ? என்ற சிந்தனை உருவாகும். புதிய ஒப்பந்தங்களால் இலாபம் உண்டு. அந்நிய தேச அனுகூலம் கிட்டும். மூத்த சகோதரத்தால் சில நன்மைகள் கிடைக்கலாம். முக்கிய புள்ளிகள் உங்கள் சிக்கல்களைத் தீர்க்கலாம். இக்காலத்தில் அங்காரக வழிபாட்டை மேற்கொள்வதன் மூலம் மேலும் நற்பலன்களை அடைய முடியும்.

29.12.2009 முதல் 29.09.2010 வரை பூராட நட்சத்திரத்தில் சுக்கிரன் சாரத்தில் ராகு சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட தகராறுகள் இனி அகலும்.இதுவரை பஞ்சாயத்துக்களில் ஒத்துவராதவர்கள் இப்பொழுது உங்கள் சொற்களுக்கு மதிப்புக்கொடுப்பர். குழந்தைகள் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றி பெறும். கோவில் திருப்பணிகளை முன்னின்று நடத்தும் வாய்ப்பு ஒரு சிலருக்கு கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். அடகு வைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வந்து சேர்ப்பீர்கள்.

அதே சமயத்தில் புனர்பூச நட்சத்திரத்தில் வியாழன் சாரத்தில் கேது சஞ்சரிக்கிறார். மே 2010க்கு மேல் திருவாதிரை நட்சத்திரக் காலில் கேது சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக தைரியமும் தன்னம்பிக்கையும் கூடும். தான் உண்டு தன் வேலை உண்டு என்று இதுவரை இருந்த நீங்கள் மற்றவர்கள் நலனிலும் அக்கறை காட்டுவீர்கள். சுக போகச் செலவுகள் அதிகரிக்கும். தூங்காமல் உழைக்க வேண்டியிருக்கிறதே என்று அங்கலாய்ப்பீர்கள். கணவன் , மனைவிக்குள் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு அகலும். விவாதங்களை தவிர்ப்பது நல்லது. துர்க்கை வழிபாடு துயரங்களை துள்ளி ஓடச் செய்யும்.

12ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் ராகுவால் பணிகளில் தொய்வு ஏற்படாது இருக்கவும்

**ஜோதிடக் கலாமணி**
**சிவல்புரி சிங்காரம்**

6ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் அல்லல்கள் அகலவும் வாரம் தோறும் சனிக்கிழமை அன்று சனிஸ்வர வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

சுய ஜாதகத்தில் ராகு கேதுக்களின் பலம் அறிந்து சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து வாழ்க்கையை வளமாக்கிக்கொள்ளுங்கள். (தொடரும்)

## வன்னிக்குச் சென்ற இராணுவத் தளபதி படையினர் மத்தியில் அரசியல் பிரசாரம்

(கொழும்பு)

வன்னிக்கு விஜயம் மேற்கொண்ட இராணுவத்தளபதி லெப் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா படையினர் மத்தியில் அரசியல் பிரச்சாரங்களை மேற்கொண்டதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் அவை மேலும் தெரிவித்துள்ளதாவது, கடந்த திங்கட்கிழமை வன்னிக்கு அவசர விஜயம் ஒன்றை மேற் கொண்ட இராணுவத் தளபதி லெப் ஜெனரல் ஜெகத் ஜெயசூரியா இராணுவத்தினர் மத்தி யில் அரசியல் பிரச்சாரங்களை மேற் கொண்டுள்ளார்.

படையினர் பெற்ற வெற்றிக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுமே காரணம்.

அவர்கள் தான் படை நடவடிக்கையை தலைமை தாங்கியவர்கள் என்பதை படையினர் நினைவில் கொள்ள வேண்டும் என ஜெய சூரியா படையினர் மத்தியில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

வன்னிக்கு சென்ற தளபதி கிளிநொச்சி இராணுவ தலைமையகத்திற்கும் விஜயம் மேற்கொண்டிருந்ததாக அவை மேலும் தெரிவித்துள்ளன. (ச-5)

## இந்திய வெளிவிவகார அமைச்சருடன் ஆறுமுகம் தொண்டமான் பேச்சு

### மீள் குடியமர்வு குறித்து அறிக்கை சமர்ப்பிப்பு

(புதுடில்லி)

இலங்கை அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் நேற்று முன்தினம் புதுடில்லியில் இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவைச் சந்தித்து போரினால் இடம் பெயர்ந்து முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் இலங்கை வந்து முகாம் களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களின் நிலை குறித்து ஆய்வு செய்த பின்னர் இலங்கை அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சருடன் அவர் ஆலோசனை நடத்தியுள்ளார்.

இந்திய எம்.பிக்கள் குழு இலங்கை வந்து சென்றதன் பின்னர் 50 ஆயிரம் பேர் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் இன்னும் ஒரு இலட்சத்து 86 ஆயிரம் பேர் முகாம்களில் உள்ளதாகவும் ஆறுமுகம் தொண்டமான் இச்சந்திப்பின் போது தெரிவித்தார்.

இதேவேளை தமிழ் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைகளிற்காக இந்தியா வழங்கவுள்ள உதவித் தொகையைக் கொண்டு நிறைவேற்றப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பாக ஆலோசனை நடத்த இலங்கை ஜனாதிபதியின் ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் சிறப்புப் பிரதிநிதிகள் குழு விரைவில் இந்தியா செல்லவிருப்பதாகவும் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார். (ச-14)

> ஒன்னுமே புரியல்லே ஒலகத்திலே
> என்னமோ நடக்கிது மர்மாயிருக்கிது
> – நடிகர் சந்திரபாபு

வலம்புரி

## ஏதேதோ நடக்கிறது எங்களுக்குத்தான் புரியவில்லை!

இலங்கையின் கூட்டுப் படைத் தளகர்த்தர் ஜெனரல் சரத் பொன்சேகாவை விசாரிப்பதற்கு அமெரிக்கா நடவடிக்கை எனத் தகவல்கள் வெளியாகின.

இதனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடுப்படைந்து, நானே! இந்த நாட்டின் ஜனாதிபதி. நானே! யுத்தத்திற்கு உத்தரவிட்டேன். விசாரிப்பதாயின் என்னை விசாரியுங்கள் என ஆவேசமாகக் கூறியுள்ளார்.

இதற்கு முன்னதாக ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோத்தபாஜ ராஜபக்ஷவை விசாரிப்பதற்கும் அமெரிக்கா நடவடிக்கை எடுத்ததாகத் தகவல் வேறு.

விசாரணை, விளக்கம், சாட்சி என்பனவெல்லாம் எதற்கு என்று எதுவுமே தெரியாமல் நாட்டு மக்கள் குழம்புகின்றனர். மக்களில் குற்றவாளிகளை பொலிஸார் கைது செய்து விசாரிப்பர். விசாரணையில் தகவல் வெளிவராவிட்டால் பொலிஸார் தங்கள் தொழிலின் சிறப்பை காட்டுவர்.

இதுவே மக்களுக்குத் தெரிந்த விசாரணை, விளக்கம். ஆனால் இந்த நாட்டின் இராணுவத் தளபதியாக இருந்த–தற்போது இலங்கைத் தீவின் முப்படைகளின் தளகர்த்தராக இருக்கின்ற ஜெனரல் சரத் பொன்சேகாவை அமெரிக்கா ஏன் விசாரிக்க வேண்டும்.

எதற்காக சரத் பொன்சேகா அமெரிக்காவிற்கு சென்றார். இது போன்ற பல கேள்விகள் ஸ்ரீமான் பொதுஜனத்தை குழப்புகிறது.

சரி, சரத் பொன்சேகாவும், கோத்தபாய ராஜபக்ஷவும் அமெரிக்க நாட்டின் கிறீன்காட் வைத்திருப்பவர்கள். இதனால் அவர்கள் இருவரையும் அமெரிக்கா விசாரணை செய்யும் உரிமை கொண்டது என்றால்,

அவர்கள் இருவரையும் ஏன் விசாரிக்க வேண்டும். அவர்கள் என்ன தவறு செய்தார்கள் என்ற கேள்வி மறுபக்கத்தில் மக்களை துளைக்கிறது.

இந்த துளைப்பை மேலும் குழப்பமுடையதாக ஜனாதிபதியின் ஆவேசம் அமைந்துள்ளது.

அதாவது நானே யுத்தத்திற்கு உத்தரவிட்டேன். விசாரிப்பதாயின் என்னை விசாரியுங்கள் என்று கூறுகிறார் ஜனாதிபதி.

அட கடவுளே! ஜே.ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கிய நிறைவேற்று ஜனாதிபதிக்கு எதிராக எவரும் விசாரணை நடத்த முடியாது.

விரும்பினால் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை இரத்துச் செய்யும் மகா அஸ்திரமும் எங்கள் நாட்டின் ஜனாதிபதியிடம் உண்டு.

நிலைமை இதுவாக இருக்க அமெரிக்காவைப் பார்த்து என்னை விசாரியுங்கள் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறியதில் இருந்து இலங்கையை விசாரிக்கும் உரிமை அமெரிக்காவிற்கு உண்டு என்பது புலனாகின்றது.

அதுவும் வன்னியில் நடத்தப்பட்ட யுத்தம் தொடர்பிலான விசாரணை அது என்பதால் யுத்தத்தில் ஏதோ இசகு பிசகு நடந்து விட்டது என்பதும் உறுதியாகின்றது.

இரசாயன ஆயுதம் என்று தொடங்கிய அமெரிக்கா ஈராக்கை படுத்திய பாடு என்ன என்பதை தெரிந்த வகையில், விசாரணை என்று ஆரம்பித்து விட்டால் அமெரிக்கா 'சும்மா' அமைதி கொள்ளாது என்பது எம் சிற்றறிவுக்கு எட்டிய உண்மை.

எதுவாயினும் எங்களுக்கு தெரியாமல் இலங்கை நாடு, பல விசாரணைகளுக்கு முகம் கொடுக்கின்றது என்பதை மட்டும் இப்போதைக்கு உணர முடிகின்றது.

# புலிகளுக்கு ஆயுதம் வழங்கிய குற்றச்சாட்டில் சிங்கப்பூர் எதிர்க்கட்சித் தலைவர் கைது

(கொழும்பு)

புலிகளுக்கு ஆயுதங்களை கொள்முதல் செய்து கொடுத்து உதவியவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிங்கப்பூரில் எதிர்க்கட்சித் தலைவர் ஒருவர் கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

புலிகள் அமைப்புக்குத் தேவையான ஆயுதங்களை வழங்க ராகவன் என்கிற பால்ராஜ் நாயுடு என்பவர் முயற்சி செய்தார் என்றும் இவரிடம் ஏராளமான வெடிபொருட்களும் இருந்ததாக பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த குற்றச்சாட்டுக்களின் பேரில் இவரை பொலிஸார் செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி கைது செய்தனர்.

புலிகளுக்கு உதவி செய்தது, வெடிபொருட்கள் வைத்திருந்தது என மொத்தம் 6 குற்றச்சாட்டுக்கள் இவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு பெப்ரவரி - செப்ரெம்பர் மாதங்களுக்கு இடையே இந்தக் குற்ச்சாட்டு சார்ந்த தவறுகளை செய்துள்ளார். தனக்கு எதிராக பொலிஸார் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்த போதிலும் அதை ஆட்சேபிக்க எந்த நடவடிக்கையையும் அவர் எடுக்கவில்லை என சிங்கப்பூரைச் சேர்ந்த ஸ்டிடெய்ஸ் டைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இவர் விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கியுள்ளார் என்று அமெரிக்காவும் இவர் மீது குற்றஞ்சாட்டியுள்ளது.

எனவே அந்த விசாரணைக்கான அமெரிக்காவுக்கு இவரை அனுப்பவும் ஏற்பாடு செய்யப்படுகிறது. அதற்கான அனுமதி கிடைக்கும் வரையில் அவர் பொலிஸ் காவலில் வைக்கப்படுவார் என்று அதிகார வட்டாரங்கள் தெரிவித்ததாக அந்த பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது. (6)

## பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தகம், சீருடை ஒரே நாளில் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கான 2010 ஆம் ஆண்டுக்கான இலவச சீருடை விநியோகம் நாளை முதல் ஆரம்பமாகிறது. இதன் முதல் தொகுதி ஏ-9 வீதியூடாக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பப்படவுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

1200 மில்லியன் ரூபா செலவில் 40 இலட்சம் மாணவர்களுக்கான நான்கு வகையான 65 இலட்சம் சீருடைகளை விநியோகிக்கக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடு முழுவதிலுமுள்ள 92 வலய கல்வி காரியாலயங்களுக்கு சீருடைகள் அனுப்பி வைக்கப்படவுள்ளன. இரண்டு இலட்சம் சீருடைகள் அடங்கிய முதல் தொகுதி நாளை ஏ-9 வீதியூடாக யாழ். வலயக் கல்வி காரியாலயத்துக்கு வைபவ ரீதியாக அனுப்பி வைக்கப்படவுள்ளன. இந்நிகழ்வு கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தலைமையில் கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது. 7 இலட்சம் ரூபா போக்குவரத்து செலவில் இவை அனுப்பி வைக்கப்படவுள்ளன.

சீருடை விநியோகத்துக்காக பத்து மில்லியன் மீற்றர் துணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை அரசாங்க பாடசாலை மாணவர்களுக்கான இலவச பாடப்புத்தக விநியோகத்தை உத்தியோக பூர்வமாக இம்முறை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி டிசம்பர் மாதம் 07 ஆம் திகதி ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

அன்றைய தினத்திலேயே சீருடைகளையும் வழங்க அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ-6)

## முதியவரை பொறுப்பேற்க கோரிக்கை

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை முடிந்த நிலையில் உள்ள முதியவர்கள் உறவினர்கள் வராததால் அங்கேயே தங்கியுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

கடந்த 29 ஆம் திகதி அவசர சேவை நோயாளர் காவு வண்டி மூலம் 62 வயது மதிக்கத்தக்க ஆண் நோயாளியொருவர் நோய்வாய்ப்பட்ட நிலையில் வீதியிலிருந்ததாக கூறப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதி-10இல் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருக்கு சிகிச்சை முடிந்தும் இவரது உறவினர் எவரும் இதுவரை இவரை வந்து பொறுப்பேற்கவோ உரிமை கோரவோ இல்லை. இவர் தற்போது கதைக்க முடியாத நிலையில் இருப்பதால் இவரின் வதிவிட முகவரியோ அல்லது உறவினரின்முகவரியோ பெற்று அறிவிக்க முடியாதுள்ளதால் உரித்துடையோர் இவரை வந்து உடன் பொறுப்பேற்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் இ.தேவநேசன் அறிவித்துள்ளார். (ச)

## மனச்சிற்பங்கள் இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் மனச்சிற்பங்கள் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப 2மணிக்கு வித்தியாலயத்தில் அதிபர் திருமதி வ. மேகலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. ரூபினி வரதலிங்கம் கலந்து சிறப்பிப்பதுடன் ,சிறப்பு விருந்தினர்களாக கொழும்புத்துறை குருதுவக் கல்லூரி துணை முதல்வர் அருட்திரு ஜெராட் சபரிமுத்து ,யாழ். மாவட்ட மேலதிக மாகாண கல்விப்பணிப்பாளர் வே.தி.செல்வரட்ணம் , யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் , தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் , யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் நிகழ்வில் நூல் வெளியீட்டு உரையை பிரசித்த நொத்தாரிசும் சட்டத்தரணியும் ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதியுமான மு.திருநாவுக்கரசு வழங்கவுள்ளதுடன் முதற் பிரதியை வித்தியாலய முதல்வர் வழங்க பிரதம விருந்தினர் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

அத்துடன் நூல் மதிப்பீட்டுரையை தெல்லிப்பளை மகாஜனாக்கல்லூரியின் இசை ஆசிரியையும் சிரேஷ்ட உளவளத்துணையாளருமான திருமதி பாகீரதி கணேசதுரை வழங்கவுள்ளார். (ஓ-4)

# நீயும் இறைவன், நானும் இறைவன்

உலகம் தோன்றிய காலம் தொட்டு இன்றுவரை படைப்பும், அழிப்பும் இறைவனையே சார்ந்தது என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. உலகாயுதவாதிகள் கூட இறுதியில் நமக்கு மிஞ்சிய பேரறிவு ஒன்றுண்டு என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். இறைவனைக் கண்டுணர்ந்தும் கற்றுணர்ந்தும் இறைவன் வயப்பட நாம் நடப்பதுண்டா? என்றால் அது கேள்வியே. அத்தோடு உனக்கொரு இறைவன் எனக்கொரு இறைவன். உங்கள் இறைவனை விட எங்கள் இறைவன்தான் பெரியவன் என போட்டா போட்டி. இவையெல்லாம் ஒருவகைச் சுரண்டலும் சுயநலமும் எனலாம்.

இவைகளுக்கெல்லாம் விடை பகருமாப் போல் மனித உடலை உடையாக அணிந்து இன்று மனித வடிவில் நடமாடும் எல்லாம் வல்ல இறைவன் ஸ்ரீ சத்ய சாயி பகவான் அருளுகின்றார். அன்பரே! இறைவன் என்பவர் ஒருவரே இயேசுவும் இறைவனே, அல்லாவும் இறைவனே, புத்தரும் இறைவனே, ஏன் நீயும் இறைவனே, நானும் இறைவனே .ஆனால் உன்னை உனக்குப் புரியவில்லை. எனக்கு நான் இறைவன் என்பதைப் புரிந்திருக்கிறேன். முன்னைய பிறவிகளில் நீங்கள் செய்த காரியங்களுக்கு ஏற்ப இப்பிறவியில் அனுபவிக்கிறீர்கள். அதினின்றும் கடவுளின் கருணையால் காப்பாற்ற முடியாதென்றும் நினைத்து மனம் போன போக்கில் மேலும் பல காரியங்களைச் செய்கின்றீர்கள். ஆனால் முன்னைய கர்ம வினைகள் உங்களைச் சூழும் போது அவற்றின் பயன்கள் உங்களைச் சாராதிருக்க நான் உங்களுக்கு வழி சமைக்கிறேன் என்கிறார் பகவான் பாபா.




உண்மைதான்; வியாதியினால் துன்பப்பட்டுக்கொண்டு புட்டபர்த்தியில் கூடி, உட்கார்ந்து ஸ்வாமியின் தரிசனம் பெறக் காத்திருக்கும் மக்கள்; ஸ்வாமியின் கைகளில் அனைத்துக் கவலைகளையும் கொடுத்து விட்டு உட்கார்ந்திருக்கும் இவர்கள் துன்பப்படுவதாகத் தோன்றவில்லை. அவர்கள் வேறு எங்காவது இருந்தால், அவர்களது நோயின் கடுமை அவர்களுக்கு மிகுந்த துன்பத்தை தந்திருக்கும். இங்கு ஸ்வாமியைத் தரிசிக்கும் ஒப்பற்ற மகிழ்ச்சியை எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருக்கும் போது அவர்கள் துன்பத்தை உணர்வதில்லை. தரிசித்து முடிந்த பின் அந்த அனுபவத்தையே மறுபடியும் நினைவு கூர்ந்து மகிழ்கிறார்கள். அதனையே சிந்திக்கையில் மகிழ்ச்சியின் அளவு காலப்பரிமாணமும் அதிகரிக்கின்றன. தண்டனையை அனுபவிக்க அவர்களுக்கு நேரமேது? மனனம் , சிந்தனம், தரிசனம் இவற்றின் மூலமாக துன்பம் இல்லாமல் கழிகிறது. பிரசாந்தி நிலையத்திற்குள் செல்வதானது, உடல் ரீதியாகவும் தத்துவ ரீதியாகவும் எந்த விதமான துக்கத்திற்கும் , துன்பத்திற்கும் பரிகாரமாகும்.

ஜெய்சாயிராம் யாதவன்

# அதிபர் சர்தாரியை வெளியேற்ற பாக். இராணுவ ஜெனரல்கள் சதி

## அமெ. புலனாய்வுத்துறை தெரிவிப்பு



(வோஷிங்டன்)

பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரியை, ஜனநாயக மற்றும் அரசியல் ரீதியாக பதவியில் இருந்து வெளியேற்ற, அந்நாட்டு இராணுவ ஜெனரல்கள் சதி செய்து வருகின் றனர் என அமெரிக்க புலனாய்வுத் துறை தெரிவித்துள்ளது.


இதுகுறித்து, அமெரிக்க புலனாய்வு நிறுவனத்தைச் சேர்ந்த ஸ்ட்ராட்போர் என்பவர் கூறியதாவது,

பாகிஸ்தானில், தலிபான்கள் தொடர்ந்து தாக்குதல்கள் நடத்தி வருகின்றனர். சமீபகாலமாக அங்கு பயங்கரவாத தாக்குதல் அதிகரித்துள்ளது. இதைக் கட்டுப்படுத்த முடியாமல், அந் நாட்டு அரசு மிகவும் பலவீனமாக உள்ளது.

அதனால் இராணுவ புரட்சி இல்லா மல், அதிபர் சர்தாரிக்கு எதிராக இராணுவத்தினரின் ஆதரவைத்திரட்டி, அவரே தன் பதவியை விட்டு விலகும் வகையில் செய்ய இராணுவ ஜெனரல்கள் முற்பட்டுள்ளனர். இதற்கான வேலைகளிலும் இறங்கியுள்ளனர். அவர்களின் முக்கிய நோக்கம் சர்தாரியை பதவியை விட்டு இறக்குவது, தற்போதைய அரசை கலைப்பது அல்ல. கடந்த 1985 ஆம் ஆண்டு முதல் 1999 ஆம் ஆண்டுவரை, நான்கு அரசுகளைப் பாக். இராணுவம் கலைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு ஸ்ட்ராட்போர் கூறினார். (ஓ-6)

# கராச்சியில் ரயில்கள் மோதல்; 15 பேர் பரிதாப பலி

(கராச்சி)




பாகிஸ்தான் துறை முக நகரமான கராச்சியில் நேற்று முன் தினம் சரக்கு ரயிலும், பயணிகள் ரயிலும் நேருக்கு நேர் பயங்கரமாக மோதிக் கொண்டதில் 15 பேர் இறந்தனர்.

பயணிகள் ரயிலின் சாரதி சிக்னலை கவனிக்காததால், இந்த விபத்து நடந்ததாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில், சிக்னல் தருவதில் ஏற்பட்ட குழப்பத்தால் தான், விபத்து நடந்ததாக மற்றொரு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

## சோமாலியாவில்

# செல்போன் றிங்ரோன்களுக்கு தீவிரவாதிகள் தடை



(நைரோபி)

சோமாலிய நாட்டில் அல்ஷபாப் என்ற அமைப்பைச் சேர்ந்த தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். சமீபத்தில் இவர்கள் சோமாலியாவில் உள்ள கிஷ்மாயூ என்ற துறைமுக பகுதியையும் தெற்கு பகுதியையும் கைப்பற்றினர்.

இதைத் தொடர்ந்து அப்பகுதியில் அவர்கள் தங்கள் அதிகாரத்தை செலுத்த தொடங்கிவிட்டனர். மோகாடிசுவை தலைநகராக அறிவித்துள்ளனர். தங்களுக்கு என்று தனி சட்ட திட்டங்கள் அடங்கிய கோர்ட்டுகள், தனி கொடி என்று அமைத்துள்ளனர். தங்கள் ஆளுமைக்குட்பட்ட பகுதிகளில் சினிமா, நடன நிகழ்ச்சிகள் மற்றும் திருமண் நிகழ்ச்சிகள், மற்றும் விளையாட்டுக்களை தடை செய்துள்ளனர். இந்த நிலையில் அவர்கள் செல்போன்களில் பயன்படுத்தி வந்த றிங்ரோன்களுக்குத் தடை விதித்துள்ளனர்.

அந்நாட்டு மக்கள் இந்திப்பட பாடல்கள் மற்றும் தாங்கள் பின்பற்றும் மத பாடல்களை செல்போன்களில் றிங்ரோன்களாகப் பயன்படுத்தி வந்தனர். அதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதால் அவற்றைப் பயன்படுத்த முடியவில்லை. தீவிரவாதிகளின் தடையை மீறுபவர்களுக்கு கடுமையான தண்டனையும் வழங்கப்படுகிறது.

அலி முகமது யூசுப் (20) என்ற வாலிபர் தனது செல்போன் மூலம் இசை மற்றும் வீடியோ மூலம் படங்களை பார்த்து ரசித்தார். இதை அறிந்த தீவிரவாதிகள் அவரை நடு ரோட்டில் நிறுத்தி வைத்து சவுக்கால் அடித்து தண்டனையை நிறைவேற்றினர். தங்கள் மதத்துக்கு எதிரான கொள்கைகளை குறிப்பாக இசை மற்றும் செக்ஸ் வீடியோ காட்சிகளை அனுமதிக்கமுடியாது என அல் ஷபாப் தீவிரவாத அமைப்பின் செய்தி தொடர்பாளர் ஷேக் ஹாசன்யாகுப் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# ரூ.19 ஆயிரம் கோடி செலவில் சகாரா பாலைவன வெயில் மூலம் மின்சாரம் தயாரிக்கத் திட்டம்

(மியூனிக்)

ஆபிரிக்காவின் வடக்குப் பகுதியில் உலகிலேயே மிகப்பெரிய சகாரா பாலைவனம் உள்ளது. இங்கு கடுமையாக வெயில் கொளுத்துகிறது. இந்த வெயில் மூலம் (சூரிய ஒளிமூலம்) மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

பாலைவனத்தில் கண்ணாடிகள் பதித்து அதன்மூலம் சூரிய வெளிச்சத்தை வெப்பமாக்க திட்டமிட்டுள்ளது.

இந்த வெப்பத்தின்மூலம் தண்ணீரைக் கொதிக்கவைத்து நீராவியின் மூலம் டர்பன்களை இயக்கி மின்சாரம் தயாரிக்கப்படும்.

இந்த மின்சாரம் தயாரிக்கும் பணியில் ஐரோப்பாக் கண்டத்தில் உள்ள 12 மிகப் பெரிய கம்பனிகள் ஈடுபட்டுள்ளன. இதற்கு ''டெசர்ட் டெக்லாண்டஸ் டிரியஸ்'' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதற்காக ரூபா 19 ஆயிரம்கோடி (400 கோடி டொலர்) செலவிடப்படுகிறது. இங்கு தயாரிக்கப்படும் மின்சாரம் ஐரோப்பிய நாடுகளுக்கு கேபிள்கள் மூலம் கொண்டு செல்லப்பட்டு பயன்படுத்தப்படவுள்ளது. (ஓ-4)

# அமெரிக்க கவர்னர் தேர்தலில் இரண்டு மாகாணங்களை ஒபாமா கட்சி இழக்கிறது

(விர்ஜினீயா)

அமெரிக்காவில் கடந்த ஆண்டு அதிபர் தேர்தல் நடந்தது. இதில் ஜனநாயகக் கட்சி




வேட்பாளர் பராக் ஒபாமா அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தார். இந்த நிலையில் விர்ஜினீயா, நியூஜெர்சி ஆகிய இருமாகாணங்களில் கவர்னர் தேர்தல் நடந்தது.

இதைத் தொடர்ந்து வாக்குப்போட்ட வாக்காளர்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. இதில் விர்ஜினீய மாகாணத் தேர்தலில் எதிர்க்கட்சியான சுதந்திரக்கட்சி வேட்பாளர் பாப் மேக் டொன்னல் வெற்றி பெறுவது உறுதியெனத் தெரியவந்துள்ளது.

நியூஜெர்சியில் இருகட்சி வேட்பாளர்களும் சம நிலையில் இருப்பது தெரியவந்துள்ளது.

அதிபர் தேர்தலில் இப் பகுதியில் ஆளும் கட்சி அமோக வெற்றி பெற்றது. அதிபர் தேர்தல் முடிந்து ஒரு வருடம் ஆன நிலையில் கவர்னர் தேர்தலில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. ஆளுங் கட்சியினரிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஓ-6)

## உலகம் முழுவதும்

# மேலும் 2800 உயிரினங்கள் கண்டுபிடிப்பு

(ஜெனீவா)

உலகம் முழுவதும் வாழும் உயிரினங்கள் பற்றிய விபரங்களை ஐ.யு.சி.என். என்ற நிறுவனம் இந்த ஆண்டு ரெட்டாட் என்ற புத்தகத்தில் வெளியிட்டுள்ளது. அதன்படி இந்த ஆண்டு 17 இலட்சத்து 921 உயிரினங்கள் இருப்பது தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு 16ஆயிரத்து 928 உயிரினங்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு வெளியிட்டுள்ள அறிக்கையின்படி 2 ஆயிரத்து 800 புதிய உயிரினங்கள் கூடுதலாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் மட்டும் 293 வித பல்லிகளும், பாம்புகளும் உள்ளன. தற்போது பனாய் உடும்பு என்ற இனம் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளது. நைஜீரியாவிலும் காமரூனிலும் பீமன் தும்பி என்ற புதிய இனம் கண்டுபிடிக்கப்பட்டு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் பனாமாவில் மரத் தவளையும் மடகஸ்காரில் மலை எலியும் புதிதாக பட்டியலில் சேர்ந்துள்ளது. (ஓ-4)

## ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அதிபராக ஷேக் கலீபா தேர்வு

ஐக்கிய அரபு எமிரேட்ஸின் அதிபராக ஷேக் கலீபா பின் ஜாயித் அல் நயான்(61) மீண்டும் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவர் இந்தப் பதவியில் அமர்வது இது இரண்டாவது முறையாகும்.

ஐக்கிய அரபு எமிரேட்ஷில் அடங்கியுள்ள 7 அமீரகங்களின் ஆட்சியாளர்கள் அடங்கிய உயர் அதிகாரக்கூட்டமைப்பு மன்றம் ஷேக் கலீபாவை அதிபராகத் தேர்வுசெய்தது என்று அரசு செய்தி நிறுவனமான வாம் தெரிவித்துள்ளது. அதிபரின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் ஆகும். (6-4)

# 8 முறை பிளாஸ்டிக் சேர்ஜரி செய்து முழு அழகியான பெண்

ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த பிளாஸ்டிக் சேர்ஜன் ரெசா வோசவ். 48 வயதான பெண்ணை சமீபத்தில் சந்தித்தார் அவர் பெயர் கேனி. 38 வயதான இவர் ஒரு ஹோட்டலில் பணியாற்றி வந்தார். அவரை முழு அழகியாக செதுக்க 8முறை பிளாஸ்டிக் சேர்ஜரி செய்தார். அவர் மார்பகத்தையும், தொடைகளையும், கண்களையும், முகத்தையும் மாற்றி அமைக்க அவர் சத்திரசிகிச்சை செய்தார்.

நான் முதல் முறையாக கேனியைச் சந்தித்த போது அவர் உடல் அம்மப்பில் சில குறைபாடுகள் இருப்பதை நான் கவனித்தேன். இருந்தபோதிலும், அவரிடமிருந்த அழகு என்னைக் கவர்ந்தது.

அவர் இடுப்பும் தொடைகளும் பெரிதாக இருந்தன. அதனால் சில திருத்தங்கள் செய்தேன். பிறகு மேலும் சில திருத்தங்கள் என எட்டு முறை சத்திர சிகிச்சை செய்தேன் என்று கூறினார்.

அவர் மார்பகத்தையும், உதடுகளையும் பெரிதாக மாற்றினார். கண் இமைகளை கொஞ்சம் உயர்த்தினார். நெற்றியை சமப்படுத்தினார். இதன்மூலம் கேனி இன்னும் அழகான பெண்ணாக மாறினார். இந்த சத்திரசிகிச்சைக்கு மட்டும் அவருக்கு 12 இலட்சத்து 60 ஆயிரம்ரூபா செலவானது என குறிப்பிட்டுள்ளார். இந்த சத்திரசிகிச்சைக்குப் பிறகு முழு அழகியான பெண்ணை அவர் திருமணம் செய்து கொண்டார். (ஓ-6)



உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலய பரிசளிப்பு விழா நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து கொண்ட சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரை அதிபர் மு.விக்னேஸ்வரன் மற்றும் பாடசாலைச் சமூகத்தினர் அழைத்து வருவதை முதலாவது படத்திலும்,முதல்வர் மங்கல விளக்கேற்றுவதையும்,ஆரம்ப பிரிவு மாணவர்களின் வேப்பிலை நடனத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்:கோப்பாய் நிருபர்)

# அளவெட்டி தெற்கில் அதிசயம்

## நாகதம்பிரான், அம்மன் விக்கிரகங்கள் நிலத்துக்கடியில் இருந்து தோன்றின

(யாழ்ப்பாணம்)

அளவெட்டி தெற்கு தம்பளாவத்தை தான்தோன்றி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய பின்வீதியிலிருந்து நாகதம்பிரான் மற்றும் அம்மன் உருவ விக்கிரகங்கள் நிலத்திலிருந்து தோன்றிய அதிசய நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது. இவ்அதிசய நிகழ்வு நேற்று முன்தினம் இரவு 12.05 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இந் நிகழ்வு தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது;

அளவெட்டி தெற்கு, தம்பளாவத்தையில் கடந்த வருடம் மார்கழி 27 ஆம் திகதி அவ் ஆலயத்திலுள்ள அம்மன் நிலத்தில் இருந்து தோன்றியது.

இதனையடுத்து அம்மனுக்குக் கோவில் அமைப்பதற்காக இவ் வருடம் சித்திரை மாதம் 23 ஆம் திகதி அத்திபாரம் போடப்பட்டு ஆவணி 27 ஆம் திகதி மஹா கும்பாபிஷேகம் இடம்பெற்றது.

அதன் பின்னர் இவ் ஆலயத்தில் அருள்வாக்குச் சொல்லப்பட்டும் வருகின்றது. இங்கு அருள்வாக்குச் சொல்லும் பெண் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் இடம்பெறுவதற்கு 31 நாள்களுக்கு முன்னர் இவ்வாறான அதிசய நிகழ்வொன்று குறிப்பிட்ட இடத்தில் நிகழும் எனக் கூறியிருந்தார்.

இந் நிலையில் அருள்வாக்கில் கூறப்பட்ட இடத்தைச் சுற்றி பக்தர்கள் காவல் காத்து வந்தனர். நேற்று முன்தினம் இரவு 12.05 மணியளவில் நிலத்தில் பிளவு ஏற்பட்டு நாகதம்பிரான் மற்றும் அம்மன் விக்கிரகங்கள் மேலெழுந்தன.

இவ் இரு விக்கிரகங்களும் அவ் ஆலயத்தில் வைத்துப் பூசை செய்யப்பட்டு வருகின்றன. இவ் அதிசயக் கடவுள்களின் விக்கிரகங்களைப் பெருமளவான பக்தர்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

இதேவேளை இத் தான்தோன்றிக் கடவுள்களின் உருவச் சிலைகளை படமெடுத்த புகைப்படப் பிடிப்பாளர் ஒருவர் விபத்தில் காயமடைந்துள்ளார்.

நிலம் பிளந்து மேலெழுந்து தோன்றிய நாகதம்பிரான் மற்றும் அம்மன் விக்கிரகங்களை புகைப்படம் எடுப்பதற்காக புகைப்படப் பிடிப்பாளர் ஆலயத்திற்குச் சென்றபோது அருள்வாக்குச் சொல்லும் பெண் அருள்வாக்குச் சொல்லிக் கொண்டிருந்தபோது புகைப்படம் எடுக்க வேண்டாம் எனக் கூறியுள்ளார்.

எனினும் அவ்வூர் மக்களின் கோரிக்கைகளுக்கு அமையவும் புகைப்படம் எடுத்து விட்டுத் திரும்பும் வழியில் புகைப்படப் பிடிப்பாளரின் மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளாகி அவர் காயமடைந்தார்.

இதேவேளை மேலும் இரு இடங்களில் இரு விக்கிரகங்கள் தோன்றும் எனவும் அருள்வாக்கில் கூறப்பட்டுள்ளது. இதனையடுத்து விக்கிரகங்கள் தோன்றும் எனக் கூறப்பட்ட இடத்தைப் பக்தர்கள் காவல் காத்து வருகின்றனர். (சி)

## 2010 இல் 2 கிரகணங்கள்

அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் இரண்டு கிரகணங்கள் நிகழவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஒன்று ஜனவரி முதல் நாளான புத்தாண்டன்று நிகழவுள்ள சந்திரகிரகணம். இரண்டாவது 15 ஆம் திகதி நிகழவுள்ள சூரிய கிரகணம்.

சூரிய கிரகணம் 108 ஆண்டுகளுக்குப் பிறகு வரக் கூடிய ஒரு கங்கண சூரிய கிரகணமாகும். புவியை நிலவு நீள் வட்டப் பாதையில் சுற்றி வருகின்றது. இதனால் புவிக்கு அருகே வரும்போது 3 இலட்சத்து 57 200 கிலோமீற்றர் தூரத்திலும் புவியை விட்டு வெளிச் செல்கையில் 4 இலட்சத்து 7 ஆயிரத்து 100 கிலோமீற்றர் தொலைவிலும், சுற்றி வர நிலவு இருக்கும்.

தொலைவில் இருக்கும் போது நிலவின் தோற்ற அளவு சற்றுச் சிறியதாக இருக்கும். எனவே புவியை விட்டு விலகிச் செல்கையில் ஒரு சூரிய கிரகணம் நடந்தால் சந்திரனால் சூரியனை முழுமையாக மறைக்க முடியாது.

அதிகபட்ச கிரகணத்தின்போது சூரியனின் வெளி விளிம்பு ஒரு கங்கணம் போல வட்டமாக ஒளியுடன் தெரியும்.இதுவே கங்கண சூரிய கிரகணம் எனப்படும்.

1901 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி கங்கண சூரிய கிரகணம் தமிழகத்தில் தெரிந்தது. 108 ஆண்டுகளுக்குப் பிறகு எதிர்வரும் ஜனவரி 15 ஆம் திகதி மீண்டும் சூரிய கிரகணம் தெரியவுள்ளது. (ச-5)

## காணி வழங்கல் திட்டத்தின் கீழ் 17 பயனாளிகளுக்குக் காணிகள்

தென்மராட்சி பிரதேச காணி வழங்கல் திட்டத்தின் கீழ் 17 பயனாளிகளுக்கு காணிகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இப் பயனாளிகளை குடும்ப அட்டை ,தேசிய அடையாள அட்டையுடன் வருகை தந்து பிரதேச செயலகக் காணிக் கிளையில் தொடர்பு கொண்டு காணி உறுதிகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனப் பிரதேச செயலர் சே.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

இராசு துரைராசா (5 வீட்டுத் திட்டம் நாவற்குழி),சுப்பையா ஆச்சாரி நாராயணன் (5 வீட்டுத் திட்டம் நாவற்குழி), கதிரேசு சிவனேசன் (கெற்பலி மத்தி.), நாகமுத்து கந்தையா (கைதடி மேற்கு),

ஐயங்கன் வள்ளி(கட்டைக்காடு கைதடி), சின்னவன் வேலன் (எருதிடல் கலட்டி,கைதடி), சின்னத்தம்பி பொன்னர் (எருதிடல் கலட்டி, கைதடி), வேலன் பூதன் (எருதிடல் கலட்டி, கைதடி),

தம்பன் பொன்னன் (மந்துவில் மேற்கு), சரவணை வள்ளிப்பிள்ளை(காரைப்பள்ளம் கைதடி),கதிர்காமு சரவணை (காரைப்பள்ளம், கைதடி), வாரித்தம்பி விநாசித்தம்பி(வேரவத்தை ,கைதடி மேற்கு), முருகன் வள்ளிப்பிள்ளை (கண்டைக்காடு, கைதடி),

முத்தர் சின்னப்பு (கேரவத்தை,கைதடி), இராமலிங்கம் சுப்பையா(செட்டியன் கலட்டி, கைதடி),பொன்னுத்துரை தங்கரெத்தினம் (செம்பாடு எழுதுமட்டுவாள்),சிறிஸ்கந்தராசா மனோகரி(மிருசுவில்படித்தமகளிர்திட்டம்) (ச-29)

## பருத்தித்துறை–அம்பனை வீதியூடாக போக்குவரத்தில் ஈடுபட அனுமதியில்லை

### தனியார் பஸ் உரிமையாளர்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை- அம்பனை வீதி 755 ஆம் இலக்க பஸ் போக்குவரத்து பாதையூடாக சேவையில் ஈடுபட தனியார் பஸ் சேவைகளுக்கு தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவால் அனுமதி வழங்கப்பட்டு ஒரு வரு டம் ஆன போதும் படையினரால் அனுமதி வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்ப டுகின்றது. இது தொடர்பில் தெரியவருவ தாவது,

பருத்தித்துறை–அம்பனை வீதி 755ஆம் இலக்க பஸ் சேவையை நடத்த தனியார் பஸ்கள் இரண்டிற்கு கடந்த வருடம் டிசம்பர் 17 ஆம் திகதி தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவினால் வழி அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டது. எனினும் பலாலி படைத் தலைமையகத்தினால் இதுவரை பாதுகாப்பு அனுமதி வழங்கப்படாமையால் குறித்த போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் பலாலி படைத்தளபதிக்கு கோரிக்கை விடுத்து போதும் எதுவித பதிலும் கிடைக்கவில்லை என யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் தேசிய போக்குவரத்து ஆணைக் குழுவால் பாதுகாப்பு அனுமதி பெறப்பட்ட இரு பஸ்களுக்கு வருடாந்தம் அரசாங்கத்திற்கு தலா 3 ஆயிரம் ரூபாய் கட்டணம் அறிவிடப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை மாவட்டத்திற்குள்ளேயே பஸ் போக்கு வரத்துக்கு பாதுகாப்பு அனுமதி கிடைப்பது தாமதமாவதால் வெளிமாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபட வழி அனுமதிப் பத்திரத்தை வழங்குவதற்கு யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களம் மறுத்துள்ளது. (ச-5)



வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை சிறுவர் பாடசாலை வருடாந்த நிகழ்வில் வணக்கத்துக்குரிய ஜோன் பொட்டொமலி மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியரும் கிறிஸ்தவ சமய சமூக ஆராய்ச்சி நிறுவன இயக்குநருமாகிய வணக்கத்துக்குரிய டி.எஸ்.சொலமன் ஆகியோர் உரையாற்றுவதையும் சிறுவர்களின் நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.

# ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ...

முல்லைத்தீவு மாவட்டம் துணுக் காய் பிரதேசத்தில் மீளக்குடியமர்த் தப்பட்டுள்ள இடம் பெயர்ந்த மக்க ளைச் சந்தித்து உரையாடிய ஜனாதி பதி அம்மக்கள் மத்தியில் தமிழில் உரையாற்றியுள்ளார்.

அவர் தனது உரையில் தெரிவித் ததாவது,

இந்தநாட்டில்வாழ்கின்றஎல்லோ ரையும் பாதுகாக்க வேண்டியது எனது பொறுப்பு. அது எனது கடமை. நான் அதை நிச்சயமாகச் செய் வேன். இந்த நாட்டில் வாழும் எல்லா மக்களும் பயம், சந்தேகம் இல்லா மல் பாதுகாப்பாக வாழவேண்டும். எல்லோரும் சம உரிமையோடு வாழவேண்டும்.

துப்பாக்கிக் கலாசாரம் மீண்டும் உருவாகாத வகையில் செயற்பட வேண்டும்.

நான் உங்கள் தோழன், நான் உங்கள் சொந்தக்காரன். நீங்கள் என்னை நம்பலாம். எமது அரசாங் கம் உங்களுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்யும். நாம் எல்லோரும் ஒன்று படுவோம். இந்த அழகிய தேசத்தை ஒரே தேசி யக் கொடியின் கீழ் மீண்டும் கட்டி எழுப்புவோம் என்று ஜனாதிபதி மகி ந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த வன்னி விஜயத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர், முப்ப டைகளின் தளபதிகள் புதிய பொலிஸ் மா அதிபர் மகிந்த பாலசூரிய உள் ளிட்ட உயர்மட்ட உறுப்பினர்கள் பல ரும் கலந்து கொண்டிருந் தனர்.

இடம்பெயர்ந்த மக்களிற்கான நிவாரணப் பொருட்களையும் ஜனாதி பதி வைபவரீதியாக வழங்கியுள்ளார்.

அதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் புனரமைப்புச் செய் யப்பட்டுவரும் முழங்காவில் மருத் துவமனையையும் அப்பிரதேசத் தில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெனிஸ்நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றும் பணிகளையும் ஜனாதி பதியும் அவருடன் சென்ற குழு வின ரும் பார்வையிட்டனர்.

அதன்பின்னர் கிளிநொச்சியில் படையினர் மத்தியில் உரை யாற் றிய ஜனாதிபதி படையினருக் கான சம்பள உயர்வையும் அறிவித்துள் ளார்.

கிளிநொச்சிக்கு சென்ற ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ மக்களை மீள குடியமர்த்திய பின்னர் சிவில் நிர்வாகங்களை ஏற்படுத்துவது தொடர் பாக இராணுவ அதிகாரிகளுடன் கலந் துரையாடிய தாக கூறப்படுகின்றது.

முன்னாள் இராணுவ தளபதி யும் பாதுகாப்பு தலைமை அதிகாரி யுமான ஜெனரல் சரத் பொன்சே காவின் மேற்பார்வையில் மாங்கு ளம் பிரதான படைத்தளம் உருவாக் கப்பட்டிருந்தது.

அதனை மாற்றியமைப்பது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மாங்குளத்தில் உள்ள தனக்கு நெருக்கமான படை அதி காரி களுடன் கலந்துரையாடிய தாக மற்றுமொரு உள்ளக தகவல் தெரிவித்தது. (ச-3,5,14)

## ஜெனரல் சரத்...

அண்மையில் பெரும் பரபரப்பு ஏற் பட்டிருந்தது. வெளிவிவகார அமைச் சர்ரோஹித போகொல்லாகம, அமெரி க்க தூதுவர் பெட்ரிஸியா புட்டினாஸை அழைத்து விளக்கம் அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் தேசிய சுய கெள ரவத்திற்கு பாதிப்பு ஏற்படாதவகையில் அமெரிக்கா செயற்பட்டமை பாராட்டுக் குரியதென வெளிவிவகார அமைச்சு தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்க உள்துறை மற்றும் குடிவரவுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டிருந்த விசாரணைகளில் சரத் பொன்சேகா பங்குபற்றவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, சரத் பொன்சேகா ஏற்கனவே அமெரிக் காவைவிட்டு வெளியேறியுள்ளதாகவும் அவர் இன்று அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாக இலங் கைக்கு வரவுள்ளார் எனவும் அவரி டம் அமெரிக்கா நேற்று மாலை விசா ரணை நடத்தவிருந்த போதிலும் அதனை நிராகரித்துவிட்டு அவர் பயணமாகி யுள்ளார் எனவும் தெரி விக்கப்படுகின்றது.

இதேவேளை ஜெனரல் சரத் பொன்சேகா வை நாடு திரும்புமாறு பாதுகாப்பு அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளதாகக் குறிப்பிடப்படு கிறது. (ச-5)

## சேர்ந்து செயற்படுவது...

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த் துவது மற்றும் அரசியல் ரீதியாக வரக்கூடிய நெருக்கடி களுக்கு ஒன்று சேர்ந்து முகம் கொடுப்பது போன்ற விடயங்கள் தொடர்பாக எதிர்காலத்தில் கலந் துரையாடப்படும் என தெரிவிக்கப் படுகின்றது.

இந்த சந்திப்பின் மூலமாக தமிழ் முஸ் லிம் கட்சிகளை உள்ள டக்கிய கூட்டமைப்பு ஒன்றை எதிர் காலத்தில் உருவாக்குவது தொடர் பாகவும் நேற்றைய சந்திப்பில் கலந் துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த சந்திப்புத் தேர்தலை நோக்கமாகக் கொண்டு இடம்பெற்றது அல்ல என்றும் எதிர் காலத்தில் அமைக்கவுள்ள கூட்ட மைப்பும் தேர்தலைமையமாகக் கொண்ட தல்ல எனவும் சந்திப்பில் கலந்துகொண்ட தமிழ் முஸ்லிம் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ச-5)

## பட்டதாரிகள் கொழும்...

கொண்டிருந்த போதும் பட்டதாரி கள் வீதியில் அமர்ந்து ஆர்ப்பாட்டத் தில் ஈடுபட்டனர். இதனால் புறக் கோட்டையிலிருந்து வெளிச் செல்லும் வாகனங்கள்மாத் திரம்பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டன. புறக் கோட்டைக்கு வரும் வாக னங்கள் மாற்று வழி யில் செல்ல அனுமதிக்கப்பட்டன.

இதன் காரணமாக அந் தப்பிரதேசத்தில் வாகன நெரிசல் உட்பட போக்கு வரத்தும்ஸ்தம்பிதம் அடைந் திருந்தது.

இந்நிலையில் பட்டதாரி கள் அவ்விடத்திலிருந்து கலைக்கப்பட்டு அதில் சிலர் விசாரணைகளிற்காக அழைத்துச் செல்லப்பட் டுள்ளனர். (ச-3,5,14)

## கூட்டமைப்பு...

நேற்று நாடுதிரும்பிய போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து பாதுகாப்பு தரப்பினர் விசார ணைகளை நடத்தியுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலை யத்தில் வைத்து தம்மிடம் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜி லிங்கம் தெரிவித்துள்ளார்.

சிவாஜிலிங்கம் மீது பயங்கர வாதத் தடுப்புப் பிரிவினரால் சுமத் தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் ஆதரமற்றவை என மாவட்ட நீதி மன்றம் தீர்ப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அரசி யல் அமைப்பின் சரத்துக ளுக்கு முரணான வகையில் நாடாளு மன்றஉறுப்பினர்கள்உரைகள்நிகழ்த் தினர் என குறிப்பிடப்பட்டது. (ச-5)

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி நாகமணி

**(உரிமையாளர்,நாகமணி ஸ்ரோர்ஸ், சொலமன் லேன்,சுண்டுக்குளி)**

வடமராட்சி, அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும்,70/11, சொலமன் லேன், பழைய பூங்கா வீதி,சுண்டுக்குளியை வசிப் பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நாகமணி 04.11.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் பவளத்தின் அன்புக் கணவரும், தணிகாசலம், பரிமள காந்தி, கனகமலர், அமிர்தநாயகம் (பிரான்ஸ்), இராச நாயகம் (கணக்காளர், யாழ்.போதனா வைத்தியசாலை), தர்ம நாயகம் (லண்டன்), யோகராணி (ஆசிரியை, யா/சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரி), டெய்சிராணி (ஆசிரியை,யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்),காலஞ் சென்ற நவநாயகம் மற் றும் பிரபாகரன் (உரிமையாளர்,நாகமணி ஸ்ரோர்ஸ்) ஆகியோ ரின் அன்புத் தந்தையும்,

கமலா,வேதநாயகம் (ஓய்வு பெற்ற வ.பி.போ.சபை உத்தி யோகத்தர்), ரகுநாதன் (உரிமையாளர், லக்ஸி தச்சுத் தொழிற் சாலை), சித்திரா (பிரான்ஸ்), ஜெயலக்சுமி (விரிவுரையாளர், கல்வியியற் துறை, யாழ்.பல்கலைக்கழகம்), அமுதா (லண் டன்), விமலாம்பிகைபாகன் (பிரதி சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்), நாகேந்திரன் (பரீட்சைக் கிளை, யாழ்.பல்கலைக்கழகம்), பாமினி ஆகியோரின் அன்பு மாமனா ரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.11.2009) வியா ழக்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் துண்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவ ருக்கும் அறியத் தருகிறோம்.

70/11, சொலமன் லேன்,
பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:-
குடும்பத்தினர்.

தொ.பே:-021 222 3450, 021 222 5539

(3886)


இலவசமாக 3ஆம் தவணைப் பரீட்சை
தரம்:4 முதல் 10 வரை
தரம்:4 முதல் தரம்: 10 வரை கற்கும் புதிதாக இணையும் மாணவர்களுக்கு நாளை(6.11.2009) நடைபெறும் 3ஆம் தவணைப் பரீட்சைக்கட்டணம் இலவசம். பரீட்சை முடிவில் பெறுமதியான பரிசுகள் காத்திருக்கின்றன.
அவ்வாறே..
GR:6&7 ENGLISH MEDIUM
2010 புதிய அனுமதியும் வழங்கப்படும்.
உங்கள் பிள்ளை தரம்:4இல் கற்ற படிமுறைகளோடு பல்கலைக் கழகம் செல்ல, ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் கல்வியைத் தொடர, உங்கள் கற்பனை நிஜமாக இன்றே உங்கள் பிள்ளையை இணையுங்கள்
சயன்ஸ் அக்கடமி. நல்லூர்.அரியாலை
தரம்: 4,5 வெற்றித்தேர்வு பரீட்சையோடு சாதனை ஆசிரியர் திரு.தவயோகராஜாவின் புதிய பிரிவு:2 உடன் ஆரம்பம்
நேர அட்டவணையை இன்று பெறலாம்.
எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே!
அமைதியான சூழலில் சீரான நேரஒழுங்கில்



## வேலை வாய்ப்பு

வேலை வாய்ப்பை நாடிநிற்கும் துடிப்பான இளைஞர் யுவதிகளுக்கு சிரேஷ்ட அமைப்பாளரின் கீழ் காப்புறுதி ஆலோசகராக யாழ்.மண்ணில் 45 வருடங்களாக தொடர்ந்து நிலைத்திருந்து சேவையாற்றிவரும் காப் புறுதி நிறுவனம் ஒன்றில் பணியாற்ற அரியவாய்ப்பு.

### வேலை பற்றி

- ஒரு மாத பயிற்சிக் காலத்தை உடையது.
- இக்காலப் பகுதியில் ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படும்.
- பயிற்சி நெறியின் நிபந்தனைகள் பூர்த்தியாகும் பட்சத்தில் நிரந்தரமாக்கப்படுவீர்கள்.
- பயிற்சிக் கால முடிவில் தொழில் தகைமை தொடர்பான அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

### அடிப்படைத் தகைமை

- G.C.E.O/L பரீட்சையில் கணிதம் உட்பட 6 பாட சித்தி.
- 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.


தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக சுயவிபரக் கோவையை (Bio Data) 15.11.2009க்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் விளம்பர இலக்கத்துக்கு அனுப்பவும்.

விளம்பர இல. C-3643
C/o, வலம்புரி
இல.03,02ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(C-3643)


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் சபாரெட்ணம்



**(பிரபல புகையிலை வர்த்தகர்)**

மண்டைதீவை பிறப்பிடமாகவும்,வேலணையை வசிப் பிடமாகவும்,உடையார் லேன், கொக்குவிலை தற் போதய வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சபாரெட்ணம் 4.11.2009 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் மாரிமுத்து தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற நமசிவாயம் பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சசிகலா (ஆசி ரியர், இணுவில் இந்துக் கல்லூரி), யசோதரன் (ஆசிரி யர், புனித அந்தோனியார் கல்லூரி- ஊர்காவற்றுறை), அதிரதன் (ஆசிரியர், வவுனியா கோமரசன்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரபாகரனின் (தாதிய உத்தியோகத்தர்,யாழ்.போதனா வைத்தியசாலை) அன்பு மாமனாரும், லிதுகஜன், தர் மிகா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும்,

சபாநாயகம், காலஞ்சென்ற பாலேஸ்வரி மற்றும் சாந்தமலர் ,நீலாம்பிகை, புனிதவதி, சூரியகாந்தன் (ஆசிரியர் கொழும்பு),சத்தியமூர்த்தி (ஜேர் மனி),சந்திரகுமார் (சுவிஸ்), சந்திரபாலு (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 6.11.2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன் னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயா னத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.25,உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

தகவல்:-
குடும்பத்தினர்.

(3887)


## அன்பொளி கல்வியகம்

யாழ். இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்

தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை -2009
சித்தியடைந்த மாணவர்களுக்கான

**பரிசளிப்பு நிகழ்வு**

எமது கல்வியகத்தில் கற்றுச் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு 07.11.2009 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும். மாணவர்களைத் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்.

(C-3647)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.11.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.